விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 19 செவ்வாய்க்கிழமை (03.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 074

SATS-TECH ENGINEERS

NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# இராணுவப் போக்குவரத்துக்காக ஏ-9 வீதி நேற்றுத் திறந்து வைப்பு

## எதிர்வரும் 9 ஆம் திகதி மக்களுக்கான பொருட்களை எடுத்துவர நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டுக்கு ஏ-9 வீதியூடான படையினரின் தரைவழிப் பயணம், 24 வருடங்களின் பின்னர் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. வைபவ ரீதியாக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த பிரயாணத்தின்போது அநுராதபுரத்திலிருந்து 40 பேருந்துகளில் யாழ்ப்பாணத்துக்கு படையினர் வந்ததுடன், 40 பேருந்துகளில் பலாலியில் இருந்து படையினர் விடுமுறையில் வீட்டுக்குச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை எதிர்வரும் 9ஆம் திகதி ஏ-9 பாதையூடாக மக்களுக்குத் தேவையான பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)


ஏ-9 வீதியில் இராணுவ வாகனத் தொடரணி

## விடுதலைப் புலிகளின் விமானி அடையாளம் காணப்பட்டார்

(கொழும்பு)

கட்டுநாயக்க பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட விடுதலைப் புலிகளின் விமானத்தை செலுத்தி வந்ததாக கூறப்படும் விமானி அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற நீதிவான் விசாரணைகளின் போதே குறிப்பிட்ட சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பிரதான நீதிவான் ஜெயங்கிடி அல்விஸ் விசாரணைகளை நடத்தினார். தடுப்பு காவலிலுள்ள விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரும், உயிரிழந்த விமானியின் ஒன்றுவிட்ட சகோதரியும் இந்தச் சந்தர்ப்பத்தில் சாட்சியம் (12ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் எறிகணைகள் வீழ்ந்தன வன்னியில் 45 பேர் உயிரிழப்பு

### புதுமாத்தளன் வைத்தியசாலையும் சேதம்

(கொழும்பு)

வன்னியில் நேற்று வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் 45 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் 107 பேர் காயமடைந்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு, வலைஞர்மடம், அம்பலவன் பொக்கணை, மாத்தாளன் பகுதிகளில் நேற்று திங்கட்கிழமை காலை 5.30 மணி தொடக்கம் பிற்பகல் வரை ஆட்டிலறி, பல்குழல்வெடி கணை, (12ஆம் பக்கம் பார்க்க)

## போரை நிறுத்தி நிரந்தர தீர்வு காணவே இலங்கையிடம் வலியுறுத்த வேண்டும்

### இந்தியாவிடம் புலிகள் கோரிக்கை

(புதுடில்லி)

போரை முடிவுக்கு கொண்டு வந்து மக்களின் துன்பங்களைப் போக்கி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஓர் நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு இலங்கை அரசாங்கத்தை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து ஒளிபரப்பாகும் இலத்திரனியல் ஊடகம் ஒன்றுக்கு நேற்று திங்கட்கிழமை அளித்த ஈ-மெயில் பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு முன்வைக்கப்பட்ட (02ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக் கடலில் படையினர்–புலிகள் மோதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு சாலைப் பகுதியில் 15 படகுகளில் வந்த விடுதலைப் புலிகள் படையினர் மீது மேற்கொண்ட தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் இரண்டு படகுகள் தாக்கியழிக்கப்பட்டதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம் செய்வதால் எந்தவித நன்மையும் இல்லை

### அரசாங்கம் கூறுகிறது

(கொழும்பு)

போர் நிறுத்தத்தால் எந்தவித பலனும் ஏற்படப் போவதில்லை. எனவே மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக யுத்தம் தொடரும் என வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம கூறியுள்ளார்.


இது தொடர்பாக பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்ததாவது,

போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் (12ஆம் பக்கம் பார்க்க)


சிறுவர்களை மீட்போம்
சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்
unicef

Call 110
அவசர அம்புலன்ஸ் சேவைக்கு

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால், பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு இச்சேவை வழங்கப்படுகிறது.
அழையுங்கள்
110
Trauma Secretariat
UMCOR
USAID
MEDICAL TEAMS INTERNATIONAL
World Health Organization Sri Lanka

# சமுர்த்தி வங்கிச் சங்கங்களூடாக ஆட்டோக்களுக்கு பெற்றோல்

## யாழ் பிரதேச செயலர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவுடன் வதியும், வாடகைத்தேவையின் பொருட்டு முச்சக்கரவண்டியினைப் (ஓட்டோ) பயன்படுத்தும் ஓட்டோ உரிமையாளர்களுக்கு, அவர்கள் ஓட்டோவிற்குப் பயன்படுத்தும் பெற்றோலின் அளவிற்கு ஏற்ப லீற்றருக்கு 20ரூபா வீதம் மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா வரை சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் மூலம் வழங்க சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த கொடுப்பனவை பெறத்தகுதியான ஓட்டோ உரிமையாளர்கள் உரிய படிவத்தினை தத்தமது பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரிடமோ அல்லது கிராம அலுவலரிடமோ அல்லது தங்கள் பிரிவிற்கான சமுர்த்தி வங்கிச் சங்கத்திலோ பெற்று, உடனடியாக சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் ஒப்படைக்குமாறு யாழ். பிரதேச செயலாளர் மரியதாசன் ஜெகூ தெரிவித்தார். (ச)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 'மாணவர் கல்வி முன்னேற் றத்தில் பாடசாலையுடன் பெற்றோரும் இணைதலின் முக்கியத்துவம்' என்னும் தலைப்பில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் டி பிரிவு நடத்தும் கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி கலாமணியால் நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்கில் பெற்றோர்களையும் ஆர்வலர்களையும் பங்குபற்றி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ச)

# தமிழக தலைவர்களின் படங்கள் வன்னியில் படையினரால் மீட்பு

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு



படம்: பாதுகாப்பு அமைச்சு

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் படையினர் கைப்பற்றிய விடுதலைப் புலிகளின் அதிநவீன தகவல் தொழில்நுட்ப நிலையத்தில் தேடுதல் நடத்திய படையினர் விடுதலைப் புலிகளுக்கும் தமிழக அரசியல் தலைவர்களுக்கும் இடையில் உள்ள நெருங்கிய உறவுகள் தொடர்பான படங்களையும் வீடியோக்களையும் கண்டு பிடித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ புலிகளின் சீருடையில் பிரபாகரனுடன் கைத்துப்பாக்கி சுடும் நிலையில் படங்களில் காணப்படுகிறார்.

பழ. நெடுமாறன் உட்பட மற்றும் தமிழக அரசியல் முக்கியஸ்தர்களின் படங்களையும் படையினர் இங்கு கண்டெடுத்துள்ளனர்.

இதேவேளை தமிழ் ஈழத்துக்கான தேசிய தொலைக் காட்சி சேவையொன்றை நடத்துவதற்கான வீடியோ பதிவுகளையும் படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் தமது ஒளிபரப்பை மூன்று மொழிகளிலும் செய்ம்மதியூடாக மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தனர் என்றும் அதற்குத் தேவையான சகல உபகரணங்களும் ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் நோர்வே நாட்டின் உதவியுடன் இங்கு கொண்டு வரப்பட்டன என்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களைப் பார்வையிட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. (ச-5)

# போரை நிறுத்தி நிரந்தர தீர்வு காணவே...

இந்த போர் நிறுத்தக் கோரிக்கை தமக்கு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என இலங்கை அரசு ஏற்கனவே நிராகரித்து விட்டது.

தமிழ்நாடு தூத்துக்குடியில் பிரணாப்முகர்ஜி இதனை சொல்லியிருப்பதை அரசியல் அழுத்தத்தால் சொல்லப்பட்ட ஒரு விடயமாகவே கொழும்பு பார்க்கின்றது.

அத்தோடு மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான ஒரு போர் நிறுத்தம் தொடர்பாக இந்தியா தொர்டர்ந்து சொல்லி வருவதை ஒரு தற்காலிக நடவடிக்கையாகவும், தமிழர் தாயகம் மீதான இலங்கை அரசின் படையெடுப்புக்கு வழங்கப்படும் ஓர் ஆசீர்வாதமாகவுமே நாம் கருத முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

**ஐ.நாவின் பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (27.02.2009) உரையாற்றிய ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கு பொறுப்பான செயலாளர் ஜோன் ஹோம்ஸ் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மக்கள் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை வெளியேற அனுமதிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். அதற்கான உங்களின் பதில் என்ன?**

ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கு பொறுப்பான செயலாளர் ஜோன் ஹோம்ஸ் வன்னிக்கு வந்து அங்குள்ள மக்களின் நிலைமைகளை பார்வையிடுவதற்கும், பொதுமக்கள் இங்கு பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்பதை பார்வையிடுவதற்குமான பாதுகாப்பான பயண ஒழுங்குகளை மேற்கொள்ளாதது வருத்தமானது.

வன்னியில் பணியாற்றி வந்த ஐ.நா. மற்றும் தொண்டர் நிறுவனங்கள் போன்றவற்றை அங்கிருந்து வெளியேறும்படி கடந்த வருடம் அரசு உத்தரவிட்டதை தொடர்ந்து ஐ.நா., தமிழ் மக்களை கைவிட்டுள்ளது. அதன் பின்னர் அரசு சாட்சிகள் அற்ற நிலையில் தனது போரை நடத்தி வருகின்றது.

தமது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் தான் மக்கள் இங்கு வசித்து வருகின்றனர். அவர்கள் தாங்கள் வாழும் பிரதேசத்தில் அமைதியும் பாதுகாப்பும் வேண்டும் என விரும்புகின்றனர். ஐ.நாவின் ஆதரவுடன் சிறிலங்கா அரசு நடத்தி வரும் தடை முகாம்களுக்கு செல்வதற்கு அவர்கள் விரும்பவில்லை. சிறிலங்காவின் இந்த முகாம்களை தடை முகாம்களுக்கு ஒப்பானவை என கடந்த மாதம் 20 ஆம் திகதி மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது.

**விடுதலைப் புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும் என இலங்கை அரசு தெரிவித்து வருகின்றது. அதற்கான உங்களின் பதில் என்ன?**

வன்னியில் இருந்து வெளியேறும் மக்களை அரசு தடுத்து வைத்துள்ளது அவர்களை நேர்காணல் காண்பதற்கு இராணுவத்தினரால் வழி நடத்தப்படும் ஊடகங்களையே அனுமதித்து வருகின்றது. துன்பத்தினாலும் அச்சத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களை பயன்படுத்தி ஆக்கிரமிக்கும் இராணுவத்தை விடுவிப்பவர்களாக சித்திரிக்கின்றது.

ஆனால் சில அனைத்துலக ஊடகங்களின் தகவல்களின்படி வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா சென்ற மக்கள் மீண்டும் வன்னிக்கு திரும்பவே விரும்புவதாக அறியமுடிகின்றது.

அரசியல் தீர்வு தொடர்பான அரசு காண்பித்துவரும் அசிரத்தையும் தற்போது மேற்கொள்ளப்படும் படை நடவடிக்கையும் நோக்கும்போது ஒன்று மட்டும் உறுதியானது. அதாவது படையினர் மேற்கொண்டு வரும் எல்லா நடவடிக்கைகளும் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதுதான்.

**போர் நடைபெறும் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும் என சில நாடுகளும் ஐ.நாவும் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்து வருகின்றன. அதற்கான உங்களின் பதில் என்ன?**

இவை எல்லாம் தமது பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற நடவடிக்கையை மெருகுபடுத்தும் வார்த்தைகள். ஜனநாயக வழிகளில் 1977ஆம் ஆண்டு வட்டுக் கோட்டை பிரகடனத்தின் மூலம் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக முன்மொழிந்த சுயாட் சியும் தமிழ் மக்களின் உரிமையுமே எமது நோக்கம்.

எனவே பெருமளவில் தமிழ் மக்களை அவர்களின் வாழ் நிலங்களில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளுக்கு அனைத்துலக சமூகம் ஆதரவினையும் உற்சாகத்தினையும் வழங்கக்கூடாது. அதனைத்துலக சமூகம் தொடர்ந்தும் மௌனமாக இருந்து கொண்டு தடை முகாம்களுக்கு நிதிகளை வழங்குவார்களாக இருந்தால் அது உண்மையாகவே இது ஒரு வரலாற்று பேரழிவும் தவறுமாகும்.

மிகவும் கொடூரமான அரசுகள் பலவந்தமாக பெருமளவில் வெளியேற்றப்பட்ட மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீண்டும் குடியேற்றியதாக உலகின் எந்தப் பகுதியிலும் எப்போதும் வரலாறு இல்லை. ஆனால் அனைத்துலக சமூகம் தமது சுருதியை மாற்றியுள்ள போதும் மீண்டும் பழைய முழக்கத்தையே தற்போதைய புதிய சூழலிலும் பயன்படுத்தி வருவது வருத்தமானது.

**மக்களை விடுதலைப் புலிகள் மனித கேடயங்களாக வைத்துள்ளதாக அரசு தெரிவித்து வருகின்றதே அதற்கான உங்களின் பதில் என்ன?**

தமிழ் மக்களை அவர்களின் பாரம்பரிய வாழ் விடங்களில் இருந்து வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் பிரசாரம் இது. இங்கு தமிழ் மக்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இங்கு தொடர்ந்து வாழவே விரும்புகின்றனர். அரசு, ஐ.நா. மற்றும் அனைத்துலக நாடுகள் போன்றவை தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதாக தமது அறிக்கைகளில் தெரிவித்தவாறு அவர்களை அவர்களின் வாழ் விடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றி இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் முட் கம்பிகளுடன் கூடிய முகாம்களுக்குள் அடைப்பதற்கு முயற்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

யாழ் குடாநாட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட தமிழ் மக்கள் ஒரு தசாப்தத்துக்கு மேலாக அரசு ஆக்கிரமித்துள்ள இடங்களில் மீளக்குடியேறுவதற்காக காத்திருக்கின்ற னர். அண்மையில் கிழக்கிலும் இது நிகழ்ந்துள்ளது. கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையின் பின்னர் சம்பூரில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பல இடங்கள் தமிழ் மக்கள் செல்ல முடியாத பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் திட்டமிடப்பட்ட முறையில் சிங்கள குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன.

பயங்கரவாதத்தின் மீதான போரை மேற்கொண்டு மக்களை விடுவிக்கின்றோம் என்ற போர்வையில் திட்டமிட்ட படுகொலைகளையும் இனவாத தாக்குதல்களையும் பயங்கரமான வன்முறைகளையும் அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. மனித கேடயங்களாக பொது மக்களை பயன்படுத்துவதாக போலியாக அரசு கூறியவாறு அவர்களை வெளியேற்றவும் முற்றாக அழிக்கவும் முயற்சித்து வருகின்றது. இது இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக கடந்த 61 வருடங்களாக அரசினால் மேற்கொள்ளப்படும் இன அழிப்பு நடவடிக்கையாகும்.

**விடுதலைப்புலிகளின் போர் நிறுத்த அழைப்பை பயன்படுத்தி மக்களை வெளியேற்றுமாறு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு முன்வைக்கப்பட்ட இந்த போர் நிறுத்த கோரிக்கையை, தமக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை என அரசு ஏற்கனவே நிராகரித்து விட்டது.

தமிழ் நாடு தூத்துக்குடியில் பிரணாப் முகர்ஜி இதனை சொல்லியிருப்பதை அரசியல் அழுத்தத்தால் சொல்லப்பட்ட ஒரு விடயமாகவே கொழும்பு பார்க்கின்றது.

அத்தோடு மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான ஒரு போர் நிறுத்தம் தொடர்பாக இந்தியா தொடர்ந்து சொல்லி வருவதை ஒரு தற்காலிக நடவடிக்கையாகவும், தமிழர் தாயகம் மீதான சிறிலங்காவின் படையெடுப்புக்கு வழங்கப்படும் ஓர் ஆசீர்வாதமாகவுமே நாம் கருத முடியும்.


அத்தோடு பிரணாப் முகர்ஜியின் கருத்துக்கு பதில் வழங்கியிருக்கும் அரசு விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போடுவதே ஓர் போர் நிறுத்தத்தை நோக்கி இட்டுச் செல்லும் என்று சொல்லியிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஆயுதங்களை கீழே போடுவதற்கான எந்த கோரிக்கையையும் நாம் நிராகரிக்கின்றோம்.

ஏனெனில் இந்த ஆயுதங்கள் எமது அரசியல் போராட்டத்தின் கருவிகள் மட்டுமன்றி, அவையே எமது மக்களின் பாதுகாப்பு கவசங்களுமாகும்.

இந்தியா இப்போது போரை முடிவுக்கு கொண்டு வந்து, மக்களின் துன்பங்களைப் போக்கி, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை யின் அடிப்படையில் ஓர் நிரந்தரத் தீர்வு காண வே இலங்கையை வலியுறுத்த வேண்டும். (ச-5)


## கண்ணீர் அஞ்சலி



வலம்புரி முன்னாள் ஊழியர் பத்மரஞ்சன் அவர்களின் அன்புத் தந்தை

**சிற்றம்பலம் செல்லையா**

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- சக நண்பர்கள்

(C-2371)

## உலகத் தரத்திலான சினிமாப் படங்கள் வாடகைக்கு

செயல் திறன் அரங்க இயக்கம் சினிமா ஆர்வலர்களுக்காகவும் நாடகமும் அரங்கியலும் துறைசார்ந்தோர் மற்றும் ஆர்வலர்களுக்காகவும் உலகத் தரத்திலான சினிமாப் படங்களை வாடகைக்கு வழங்குகிறது. ஆர்வமுள்ளோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**செயல் திறன் அரங்க இயக்கம்**
(பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு முன்பாக)
'அருளகம்'
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(C-2163)

# இன்று ஒரு தகவல்

## பசியைத் தூண்டலாம்!

வயிறு பசித்தால் அது இயற்கை. பசிக்கவில்லை என்றால் அது வியாதி! ஆனால் பசியையும் நாம் பசிப்பிணி என்றுதான் சொல்கிறோம். என்ன காரணம்?

வியாதியைப் போக்க வேண்டியது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியம் பசியைப் போக்க வேண்டியது!

ஒரு சமுதாயத்தில் பசிப்பிணியே இருக்கக் கூடாது. அதுதான் நல்ல சமுதாயம்.

நமது உடம்பில் பசியைத் தூண்டக்கூடிய பகுதி எது? இதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாம் உண்ணும் உணவு சமிபாடடைவதற்கு நம்முடைய மூளையின் பின்பகுதிதான் காரணமாக இருக்கிறது.

மூளையின் பிற்பகுதியில் நரம்புக்கலங்களால் ஆன இருவகை 'ஆரெக்சின்'கள் தான் பசியை உண்டாக்கிறது என்று டெக்ஸாஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

உணவு தேவை என்று உணரப்படும் போது மூளையின் அந்தக் குறிப்பிட்ட பகுதி 'ஆரெக்சின்' என்ற ஓமோனைச் சுரக்கும். அது பசி உணர்வதை தூண்டும் என்பது தான் அந்த ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு.

இந்த 'ஆரெக்சின்' வேறு சில உயிரினங்களிலும் உண்டு. எலிகளிலும் உண்டு. அதனால் எலியை வைத்து இது சம்பந்தமான ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள்.

எலிகள் உடலில் ஆரெக்சினைச் செலுத்தியவுடன் எலிகளெல்லாம் பசியால் துடிக்க ஆரம்பித்தது. எதையாவது உண்டு பசியைத் தீர்த்தால் போதும் என்ற அளவுக்கு அந்த எலிகளெல்லாம் அல்லாட ஆரம்பித்தது.

இயல்பாக அந்த எலிகள் எவ்வளவு உண்ணுமோ அதைவிட 8 முதல் 10 மடங்கு அதிக உணவை ஓரிரண்டு மணித்தியாலத்திற்குள் சாப்பிட்டுத் தீர்த்ததாம்.

சில எலிகளின், மூளையில் இந்த 'ஆரெக்சின்' அளவை கட்டுப்படுத்திப் பார்த்திருக்கிறார்கள். உடனே அவையெல்லாம் உணவைக் கண்டவுடன் முகத்தைத் திருப்பி கொண்டு போக ஆரம்பித்ததாம்.

இந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் பசி எடுக்காமல் இருக்கும் மனிதர்களுக்கும் பசியைத் தூண்ட முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

சரி... ஆரெக்சின் என்றால் என்ன? அது ஒரு கிரேக்கச்சொல். அதற்குப் பசி என்று அர்த்தம்.

நம்மவர்களுக்கெல்லாம் பசியைத் தூண்ட மருந்து தேவையில்லை. பசியைக் குறைப்பதற்குத்தான் மருந்து தேவை.

ஒரு அம்மா டாக்டரைத் தேடிவந்தார்.

'டாக்டர் என வீட்டுக்காரருக்கு திடீரென அகோரப் பசி... ஏற்பட்டுவிட்டது. சமைத்தது எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டு, கீழே கிடக்கும் குப்பை கூழங்களையும் எடுத்து சாப்பிடுகிறார். என்னவென்று பாருங்கள்" என்றார்.

"எவ்வளவு நாளாக இப்படி?" என்று கேட்டார் டாக்டர்.

"ஒரு வாரமாக"

"இவ்வளவு நாள் ஏன் சும்மா இருந்தீங்க? ஆரம்பத்திலேயே இங்கு அழைத்து வந்திருக்கலாமே..." என்றார் டாக்டர்.

"வீடு முழுவதும் சுத்தமாகட்டுமே... என்று காத்துக் கொண்டு இருந்தேன் டாக்டர்" என்றார் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்களிற்கு சிங்கள, முஸ்லீம் மாணவர்களை அனுமதிக்க உயர் நீதிமன்ற ஆலோசனையை எதிர்பார்த்துள்ளோம்

## மானியங்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களில் சிங்கள, முஸ்லிம் மாணவர்களை அனுமதிப்பதற்கு உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையை எதிர்பார்த்துள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தென்கிழக்கு பல்கலைக்கழகம் தவிர்ந்த யாழ். பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இம்முறை சிங்கள, முஸ்லிம் மாணவர்களை அனுமதிப்பதற்கு உயர் நீதிமன்றத்தில் ஆலோசனையை எதிர்பார்த்துள்ளோம்.

2008/2009 கல்வியாண்டில் பேராதனை, ஊவா வெல்லச மற்றும் வயம்ப, பல்கலைக்கழகங்களில் புதிய கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விலங்கு விஞ்ஞானமும், மீன்பிடிக் கற்கை நெறியும் வயம்பப் பல்கலையில் உணவு உற்பத்தியும், தொழில் நுட்ப முகாமைத்துவ கற்கை நெறியும், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழ கத்தின் நீர்வாழ் வளங்கள் தொழில் நுட்பமும், பனை இனத் தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில் நுட்பம் பெறுமதி சேர்ப்பும், விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் ஆகிய கற்கை நெறிகள் இக் கல்வியாண்டில் புதிதாக ஆரம் பிக்கப்படவுள்ளன.

தலா 50 மாணவர்கள் வீதம் 5 கற்கை நெறிகளுக்குமாக 250 மாணவர்கள் இப்புதிய கற்கை நெறிகளுக்காக 3 பல்கலைக்கழகங்களிலும் அனுமதிக்கப்படவுள்ளன. அத்தோடு 15 தேசிய பல்கலைக் கழகங்களிலும், 3 கற்கை நிறுவனங்களிலும் மற்றும் 2 கற்கை கல்லூரிகளிலும் 2008/2009 கல்வி ஆண்டுக்காக 20ஆயிரத்து 270 மாணவர் கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இவற்றில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஆயிரத்து 925 மாணவர்களும், கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு 1195 மாணவர்களும், தென் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு 765 மாணவர்களும், சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு 230 பேரும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க மேலும் குறிப்பிட்டார். (ஓ-5)

## தொழில்சார் தொழில்நுட்பப் பயிற்சி பல்கலைக்கழகம் விரைவில் திறக்கப்படும்

இலங்கையில் முதலாவது தொழில்சார் தொழில்நுட்பப் பயிற்சிப் பல்கலைக்கழகம் விரைவில் திறக்கப்படவுள்ளது.

இப்பல்கலைக்கழகம் வாழ்க்கை தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சினால் அடுத்த மாதம் இரத்மலானையில் திறந்து வைக்கப்படவுள்ளதாக அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார். இப் பல்கலைக்கழகத்திலுள்ள உபவேந்தர் மற்றும் உள்ளகக் குழுக்கான உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொழிலாளர் தகைமை, கற்கை நெறிகளின் இறுதி நிலைக்ள் அக் கற்கை நெறிக்கான இளமாணிப் பட்டமாக கருதப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக் கழகங் களுக்கு தெரிவாவதற்கு தகைமை பெற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்புக் கிடைக்காதவர்கள் இப்பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்து தேசிய தொழில்சார் தகைமைக்கான கற்கை நெறியின் 5 ஆம் மற்றும் 6 ஆம் நிலையில் கற்க முடியுமென குறிப்பிடப்பட்டுள் ளது.

இப்பல்கலைக்கழக கற்கை நெறிகளின் 5,6 ஆம் நிலைகள் டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா தகைமைகளாக கருதப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

## அவுஸ்திரேலிய நிதியுதவியுடன் ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தி

இலங்கையின் கிராமப்புற ஆரம்ப பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்காக அவுஸ்திரேலியா அரசாங்கம் 405 மில்லியன் ரூபா நிதியுதவிகளை வழங்கியுள்ளது.

அடிப்படைக் கல்வி உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக எதிர்வரும் 4 வருடங்களுக்குள் கிராமப்புற ஆரம்ப பாடசாலைகளின் கல்விச் செயற்பாட்டை விருத்தி செய்ய இந் நிதியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சின் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் 600 முதல் 800 வரையான கிராமப்புற பாடசாலைகளிலுள்ள 2 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்களின் ஆரம்பக் கல்வி நடவடிக்கைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

கஷ்ட மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத மொனராகலை, அம்பாறை, பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலுள்ள கிராமப்புற பாடசாலை மாணவர்கள் இதன் மூலம் பயனடையவுள்ளனர்.

இதேவேளை டயலொக் நிறுவனம் நாட்டிலுள்ள கிராமப்புற பாடசாலைகள் அடங்கலாக தெரிவு செய்யப்பட்ட 350 பாடசாலைகளுக்கு கம்பியில்லா இணையத்தள வசதிகளை 'வைமெக்ஸ்' தொழில் நுட்பத்தின் ஊடாக வழங்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக 90 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் மதவாச்சி, பூண்டுலோயா மற்றும் செவனகல ஆகிய பிரதேசங்களிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இந்த இணையத்தள வசதிகள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான ஆரம்பக்கட்ட அறிவுறுத்தல்கள் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமாக நாட்டின் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் இரண்டாம் கல்வி நவீனமயப் படுத்தும் திட்டப் பிரிவின் அதிகாரியொருவர் குறிப்பிட்டார். (ஓ-5)

## இராசி பலன்

**03.03.2009**
*(மாசி 19, செவ்வாய்க்கிழமை)*
*சப்தமி பின்னிரவு 1.11 மணிவரை*
*கார்த்திகை முன்னிரவு 7.25 மணிவரை*
*இராகுகாலம் 3.26- 4.56 மணிவரை*
*சுபநேரம் 10.56-12.26 மணிவரை*
***கார்த்திகை விரதம்***
***சித்தாமிர்தம்***

| | |
|---|---|
| மேடம் | கடினவார்த்தை, தனவிரயம், வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| இடபம் | தெய்வசிந்தை, வெகுமானம், நல்ல முயற்சி, போசன சுகம். |
| மிதுனம் | காரிய அலைச்சல், சுபசெலவு, குடும்பக் கவலை, பிறருக்கு உதவுதல். |
| கடகம் | குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், நண்பர்கள் வருகை, சயன சுகம். |
| சிங்கம் | அதிக பிரயாசை, பெரியோர் மதிப்பு, அதிகாரம், போசன சுகம். |
| கன்னி | எதிர்பாராத செலவு, சரீரப் பிரயாசை, முயற்சி தாமதம், பிரயாணம். |
| துலாம் | திருடர் பயம், உடல் நலக் குறைவு, காரிய தடங்கல், போசன சுகம். |
| விருச்சிகம் | நண்பர்கள் சந்திப்பு, தேகநலன், காரிய அனுகூலம், கீர்த்தி. |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், நோய் குணமடைதல், மன மகிழ்ச்சி, தனவருவாய். |
| மகரம் | வியாபார விருத்தி, குடும்ப கவலை, உடல் நலக்குறைவு, தாழ்ந்த சுபாவம். |
| கும்பம் | உஷ்ண வியாதி, வேலைச் சுமை, உறவினர் சந்திப்பு, பிரயாணம். |
| மீனம் | நற்கீர்த்தி, பிரயாண நன்மை, காரிய அனுகூலம், தனலாபம். |

**வளவன்**

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 90 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 60 | 70 |
| தக்காளி | 50 | 60 |
| அவரை | 20 | 35 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 20 | 30 |
| கரட் | 50 | 60 |
| பூசணி | 20 | 35 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 80 | 90 |
| சின்ன வெங்காயம் | 25 | 30-35 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 |
| பாகற்காய் | 30 | 40 |
| வெண்டிக்காய் | 20 | 30 |
| கரணைக் கிழங்கு | 20 | 30 |
| பயிற்றங்காய் | 15 | 25 |
| லீக்ஸ் | 100 | 110 |
| போஞ்சி | 15 | 20 |
| கீரை - 1 பிடி | 10 | 15 |
| தேசிக்காய் | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25-30 |

## நிறுவனத் தலைவர்களிற்கான மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான மாதாந்த மாவட்டக் கண்காணிப்புக்குழுக் கூட்டம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் சம்பந்தப்பட்டோர் தவறாது சமுகமளிக்குமாறு பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-6)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி செயலமர்வு எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் பங்குகொள்ளும்படி முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி ஜே.சறோஜினி கேட்டுக் கொள்கிறார். (ஓ)

## சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்ட 3 பேரை யாழ். மதுவரித் திணைக்களத்தினர் கைதுசெய்து யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவ் வழக்கினை விசாரணை செய்த நீதிவான் ஆர்.வசந்தசேனன், சட்டவிரோத குற்றச்சாட்டில் ஈடுபட்டவர்களுக்கு ரூபா 28 ஆயிரத்து 500 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஓ-7)

## பாடசாலை மாணவர்களுக்கான நாடக எழுத்துருவாக்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கூத்தரங்கம் நாடகமும் அரங்கியலுக்குமான இதழின் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, செயல்திறன் அரங்க இயக்கமும் கூத்தரங்கமும் இணைந்து நடத்தும் நாடக எழுத்துருவாக்கப் போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் பாடசாலை உயர்தர மாணவர்கள் பங்குபற்ற முடியும். நாடக எழுத்துரு புத்தாக்கப் படைப்பாக அமைதல் வேண்டும்.

இப்போட்டியில் முதலாவது பரிசாக 10 ஆயிரம் ரூபாவும், இரண்டாவது பரிசாக 7 ஆயிரத்து 500 ரூபாவும் மூன்றாவது பரிசாக 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இதைவிட தகுதி காண் எழுத்துருக்கள் அனைத்திற்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. அத்துடன் பரிசுபெறும் எழுத்துருக்கள் கூத்தரங்கத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதுடன் மின் பதிப்புக்களில் வெளியிடப்படவுள்ளது.

மேலும் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பான விபரங்களை பாடசாலைகளிலும், அருளகம் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள செயல்திறன் அரங்க இயக்க அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும் என செயல்திறன் அரங்க இயக்க இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## செயலிழந்த முன்பள்ளியை இயக்க நடவடிக்கை

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு ஞானஒளி சன சமூக நிலையத்தில் இயங்காமல் இருந்த முன்பள்ளியை இயக்குவதற்கு சாந்திகம் உளவள நிலையம் முன்வந்துள்ளது.

70 ஆயிரம் ரூபா செலவில் கட்டட புனரமைப்பு வேலைகள் நிறைவுற்றதும் இம் மாத இறுதிக் குள் முன்பள்ளியில் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இப் பகுதியின் சமூக, பொருளாதார தேவைகள் பற்றி முதன் முதலில் வலம்புரியே செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-36)

## கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி

(அல்வாய்)

பருத்தித்துறை கல்வி கோட்டமட்ட தெரிவு விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் வல்லிபுரம் சிதம்பராக் கல்லூரி. ஹாட்லிக் கல்லூரிகளில் இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

இப் போட்டிகளில் முதலாம், 2ஆம், 3ஆம் இடத்தைப் பெற்றவர்கள் வலய மட்டப் போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்படவுள்ளதாக பரு.கோட்டக் கல்வி அதிகாரி பா. இரகுநாதன் அறிவித்துள்ளார். (ஓ-19)

## குடும்பஸ்தர் ஒருவர் சுன்னாகம் பொலிஸில் சரண்

(யாழ்ப்பாணம்)

ஆயுததாரிகளால் தேடப்படுவதாகத் தெரிவித்து குடும்பஸ்தர் ஒருவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

புத்தூர் ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே தாம் ஆயுததாரிகளால் தேடப்பட்டு வருவதாகத் தெரிவித்து பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை இரவு புத்தூர் பகுதியில் மின்மாற்றிக்கு காவல் கடமையில் ஈடுபட்ட படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பதிலுக்கு இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் இரு இளைஞர்கள் பலியாகியுள்ளனர். இச் சம்பவத்தை அடுத்து அப் பகுதியில் படையினர் மேற்கொண்ட சோதனையின் போது வீட்டில் இருந்து ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வீட்டில் இருந்தவர்கள் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு இராணுவத்தினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சோதனை நடவடிக்கையின் போது குடும்பஸ்தர் தலைமறைவாகியிருந்ததாகவும் இவரை ஆயுததாரிகள் தேடிக் கொண்டிருப்பதாகவும் தெரிய வந்ததையடுத்தே குறித்த குடும்பஸ்தர் சுன்னாகம் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். (ஓ-5)

## இடம்பெயர்ந்து தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து யாழ். கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான பெப்ரவரி மாதத்திற்குரிய சம்பளம் வழங்கப்பட இருப்பதனால் மேற்படி ஆசிரியர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் வேதனப் பட்டியலில் கையொப்பமிட்டு வங்கியூடாகப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-6)




## ரூ.106 மில். செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடம்

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரில் "நெக்டெப்" நிறுவனத்தின் நிதி உதவியுடன் கட்டப்பட்டு வரும் நவீன பொதுச் சந்தையில் 51 கடைகள், 4 மலசலகூடங்கள் மற்றும் அலுவலகம் ஒன்றும் அமையவுள்ளதாக "நெக்டெப்" நிறுவனத்தின் யாழ்.மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் கே.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் 106 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் இப் புதிய சந்தைக் கட்டுமானப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

கட்டட நிர்மாணப் பணிகள் எதிர்வரும் ஜுலை மாதத்திற்குள் நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுதவிர, வடமராட்சி வடக்குப் பகுதியில் நெக்டெப் திட்டத்தின் கீழ் பொலிகண்டி மேற்குப் பகுதியில் 13 இலட்சம் ரூபா செலவில் மீன்சந்தை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இச் சந்தை மூலம் இப் பகுதி மீனவர்களும் மீன் வியாபாரிகளும் நன்மையடைவார்கள்.

பருத்தித்துறை, வியாபாரிமூலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு நூடில்ஸ் உற்பத்தி இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இச் சங்கத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகள் இவ் வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வார்கள்.

அத்துடன் நூடில்ஸ் உற்பத்தியினைச் சந்தைப்படுத்தும்போது மாதம் 50 ஆயிரம் ரூபா வருமானத்தை உற்பத்தி நிறுவனம் பெற்றுக்கொள்ளும். அப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சுயதொழில் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்குடனேயே இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். (ஓ-5)

## பொது அமைப்புகள் வழங்கும் உதவிகளை நல்லமுறையில் பயன்படுத்த முன்வரவேண்டும்

### ஐ.நா.உணவு விவசாய நிறுவன பிரதிநிதி யாழ் விவசாயிகளுக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)


குடாநாட்டில் விவசாயத்தை ஊக்குவிப்பதற்காகவும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வளம்படுத்தும் நோக்குடனும் மூன்று பொது அமைப்புக்கள் இணைந்து உருளைக்கிழங்கு உற்பத்தி செய்ய முன்வந்துள்ள விவசாயிகளுக்கு விதை கிழங்கு வழங்கியுள்ளன. இந்த உதவித் திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்தி பொருளாதார ரீதியில் விவசாயிகள் வளர்ச்சியடைய வேண்டும் என்பதே எமது நோக்கம்.

இவ்வாறு ஐ.நா.உணவு விவசாய நிறுவனத்தின் மாலைதீவு மற்றும் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பற்றிக் ரி இவான், ஊரெழு கிராமத்தில் இடம்பெற்ற உருளைக்கிழங்கு அறுவடை நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போது கூறினார்.

யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனங்களின் சமாசத் தலைவர் க.முதலியார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பற்றிக் ரி இவான் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது,

நிஷா புயல் மற்றும் மழை, வெள்ளம் போன்ற இயற்கையின் மாற்றத்தினால் விதை உருளைக்கிழங்கை விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் வழங்க முடியாத நிலையேற்பட்டுள்ளது. கப்பலில் ஏற்றப்பட்ட கிழங்கு இறக்குவதற்குக் காலதாமதம் ஏற்பட்டதால் ஒரு பகுதி பழுதடைந்துவிட்டது. இதனால் விவசாயிகளுக்கு முழுமையாக விதை கிழங்கை வழங்கமுடியாமல் போய்விட்டது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து விதை கிழங்கு உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி தொடர்ந்தும் இதுபோன்ற உதவிகளைச் செய்ய நாங்கள் காத்திருக்கின்றோம். நீங்களும் பொது அமைப்புக்கள் வழங்கும் இவ்வாறான உதவிகளை உதாசீனம் செய்யாமல் நல்ல முறையில் பயன்படுத்த முன்வரவேண்டும். தொடர்ந்தும் உதவி செய்ய நாங்கள் காத்திருக்கின்றோம் என்றார். (ஓ-5)



வண்ணை நாவலர் மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியில் 200m ஓட்டத்தில் முதலிடம் பெற்ற நி..அகிதாவிற்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும், நடுவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் ஏ.சி.ஜோர்ஜ் அமர்ந்திருப்பதையும், சம்பியன் பெற்ற மாணவர்களுடன் பிரதம விருந்தினர், அதிபர் சு.சிவபாதசுந்தரம் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 86

### ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300–900

ஐந்தாம் நூற்றாண்டுக்கும் ஏழாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த சமஸ்கிருதக் கல்வெட்டுக்கள் பல இலங்கையிலும் தென்கிழக்காசிய நாடுகளில் கிடைத்துள்ளன. இவை தென்பிராமி எனப்படும் எழுத்திலும் அதன் வழியாக உருவாகிய பல்லவ– கிரந்தம் என்ற எழுத்திலும் உள்ளன. இந்த எழுத்து முறைகள் பல்லவர் ஆண்ட பகுதிகளில் சமஸ்கிருதத்தை எழுதுவதற்குப் பயன்பட்டவை. ஆகவே, இந்த எழுத்து முறைகளைக் கையாண்டு கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டமை பல்லவப் பிரதேசத்திலிருந்து வந்த சிற்பிகளும் பிராமணர்களும் வணிகர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று முயற்சிகளில் ஈடுபட்டதற்குச் சான்றாகும். பெரும்பாலும் இக் கல்வெட்டுகளுடன், சைவ வைணவச் சிலைகள் மற்றும் கோயில்களின் அழிபாடுகள் ஆகியவையும் கிடைத்துள்ளமை இக் கருத்துக்கு வலுவூட்டுகிறது.

இப்படியான தொல்லியல் ஆதாரங்களுள் மிகமுற்பட்ட ஒன்றாக லாஒஸ் நாட்டில் சம்பஸ்ஸக் என்னும் இடத்தில் கிடைத்த சான்றினைக் குறிப்பிடலாம். சம்பஸ்ஸக் நகரத்தில் உயரிய தூண் ஒன்றில் ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த பெண் பிராமி எழுத்தில் ஒரு சமஸ்கிருதக் கல்வெட்டு உள்ளது. சிவன், விஷ்ணு, பிரமா ஆகிய தெய்வங்களுக்கு அமைக்கப்பட்டிருந்த நிறுவனம் ஒன்றுடன் தொடர்புடைய கல்வெட்டாக அது இருந்தது. சம்பஸ்ஸக் நகரத்துக்கு அருகாமையில் ஏழாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட வேறு இரு சமஸ்கிருதக் கல்வெட்டுக்கள் பல்லவ கிரந்த எழுத்தில் எழுதப்பட்டவையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. லாஒஸ் நாட்டுக்கு அருகில் உள்ள வியட்நாமில், பழைய பு– நான் அரசு இருந்த தென் பகுதியில், இரண்டாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடையில் ஒரு முக்கிய துறையாக விளங்கிய ஒக்– இயோ என்ற இடத்தில் இன்னொரு சமஸ்கிருதக் கல்வெட்டுக் கிடைத்துள்ளது.

தென் பிராமி எழுத்தில் உள்ள இக் கல்வெட்டு வர்த்தமானர் என்ற தெய்வத்துக்குக் கட்டப்பட்ட ஒரு கோயில் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவைபோல மேலும் பல கல்வெட்டுக்கள் பல்லவ–கிரந்த எழுத்தில் எழுதப்பட்டவையாய்த் தாய்லாந்திலும் மலேஷியாவிலும் கிடைத்துள்ளன.

பல்லவ கிரந்த எழுத்திலுள்ள சமஸ்கிருதக் கல்வெட்டுக்கள் இலங்கையிலும் கிடைத்துள்ளன. இவை சிறப்பாகத் தமிழர் செல்வாக்குப் பெரிதும் காணப்பட்ட வடகிழக்கு இலங்கையில் கிடைத்துள்ளன. திருகோணமலைக்கு வடக்கே திரியாய் என்ற இடத்தில் இருந்த மஹாயான வழிபாட்டுத் தலத்தில் ஒன்றும் திருகோணமலைக்கு தெற்கே குச்சவெளியில் இன்னொன்னும் கிடைத்துள்ளன. உள்நாட்டில் மிஹிந்தலையிலும் ஒரு சமஸ்கிருதக் கல்வெட்டுக் கிடைத்துள்ளது.

பல்லவ கிரந்தம் மஹாயான பௌத்தர்களால் மட்டுமன்றித் தேரவாத பௌத்தர்களாலும் பிறராலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதன் விளைவாகச் சிங்கள எழுத்தின் வளர்ச்சியில் சில தாக்கங்கள் ஏற்பட்டன. குகைக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட பிராமி எழுத்திலிருந்து படிப்படியாக மாறிச் சிங்கள எழுத்தாக உருவாகிக் கொண்டு வந்த எழுத்து முறை பல்லவ கிரந்தத்தினால் பாதிக்கப்பட்டுப் புதிய வழியில் பரிணாமம் பெற்றது.

இவ்வாறு பல்லவ அரசிலிருந்து பரவிய செல்வாக்கு தமிழ்நாட்டிலிருந்து அறிஞர்களாகப் பௌத்த சங்கத்தாரும் சைவசமயத் தலைவர்களும், மற்றும் பல்லவ கிரந்தத்தில் கல்வெட்டுக்களைப் பொறிப்பதற்குத் தேர்ச்சி பெற்ற சிற்பிகளும் இலங்கைக்குச் சென்றிருந்தமையைக் காட்டி நிற்கின்றது.

#### நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பம்

இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையில் நெருங்கிய உறவு ஏற்பட்ட இன்னொரு துறை நீாப்பாசனவியல் தொடர்பான துறையாகும். இதுபற்றிப் பெரும்பாலும் இலங்கை வரலாற்றாசிரியர்கள் கவனம் செலுத்தவில்லை. வரலாற்றுத் தொடக்கக் காலத்திலிருந்து தொடர்ச்சியாக இத்துறையில் ஏறத்தாழ 1000 ஆண்டுகளாகத் தொழில்நுட்ப அறிவுப் பரிமாறல் மற்றும் நீர்ப்பாசன அமைப்புத் தொழிலாளர் வருகை ஆகியவை இரு பிரதேசங்களுக்கும் இடையில் நடைபெற்றன.

இலங்கையில் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் ஆதி இரும்புக் காலப் பண்பாட்டைத் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வந்தோரால் அறிமுகப்படுத்தப் பட்டது. இவர்கள் ஆ.இ.கா.பண்பாட்டுக் கூறுகளாகிய இரும்பின் உபயோகம், நெற்பயிர்ச் செய்கை, தொடக்க நிலையிலிருந்த நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் மற்றும் சிறுகுளங்களைத் தோண்டும் கலைத்திறன் ஆகியவற்றை இலங்கைக்குக் கொண்டு வந்து பரப்பினர்.

குடியிப்புகள் பெருகி விவசாய முற்சிகள் முக்கியத்துவம் பெற்றபோது போதிய நீரைப் பயிர்ச் செய்கைக்குத் தேக்கி வைக்கவேண்டிய அவசியம் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் தோன்றிய அரசமைப்புக்களில் தொடக்கக் கட்டத்திலேயே உணரப்பட்டது. அனுராதபுரத்தில் தோன்றிய அரசில் அமைக்கப்பட்ட குளங்கள் பற்றி இலங்கையின் பாளி வரலாற்று நூல்கள் தகவல்கள் தருகின்றன. தமிழ்நாட்டின் சங்கச் செய்யுள்கள் 'குளம் தொட்டு வளம் பெருக்கிய' மன்னர்களைப் புகழ்ந்துரைக்கின்றன. குடிகளின் பயிர்ச் செய்கைக்குத் தேவைப் பட்ட நீரைப் போதிய அளவில் பெறுவதற்கான முறையில் குளங்களையும் அணைகளையும் அமைப்பது

பேராசிரியர்
கா. இந்திரபாலா

தொடக்ககால மன்னர் களுடைய முக்கிய இலட்சியங்களுள் ஒன்றாக இருந்தது என்பது தெளிவு. சமய நிறுவனங்களை அமைக்கும் கடமை போல் குளங்களை அமைக்கும் கடமை மன்னர் களுடைய தலையாய கடமை ஆகியது. இக் காரணத்தினாலே தான் இலங்கையின் பாளி வரலாற்று நூல்களிலே சுருக்கமாக ஒவ்வொரு மன்னனுடைய வரலாறும் கூறப்படும் போது அம் மன்னர் கட்டிய சமய நிறுவனங் களும் நீர்ப்பாசனக் குளங்களும் தவறாது குறிப்பிடப்படுகின்றன. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

5

ஒபாமா தான் வசிக்கும் சிக்காக்கோ நகரில் அணி திரண்ட தன் ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில் மூன்று விடயங்களை முக்கிய மாகக் குறிப்பிட்டார்.

1. அமெரிக்கா முடிவு காண முடியாத இரு யுத்தச்சேறுகளில் சிக்கியுள்ளது.

2. நாடு வரலாறு காணாத பொருளாதாரச் சிக்கலில் அகப்பட்டுள்ளது.

3. நாம் வாழும் கிரகமான பூமி கால நிலை மாற்றத்தால் ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது. அதைக் காப்பாற்ற ஆவன செய்யவேண்டும்.

இவை மிகக் கடுமையான சவால்களாக அமையினும் அவற்றை வெற்றிகொண்டு அமெரிக்காவை மீண்டும் கட்டியெழுப்பி பெருமை மிக்க பழைய நாட்களுக்கு மீட்டுச் செல்வேன் என்று உறுதி வழங்கியுள்ளார். இன, மத, மொழி, நிற, பால் வேறுபாடற்ற ஒவ்வொருவரும் கற்பனை பண்ணும் தத்தம் உலகை உருவாக்க சபதம் எடுப்பதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

"நாம் போகும் வழியோ நீண்டது. செங்குத்தான பாதையில் வெகுதூரம் பயணிக்க வேண்டும். அங்கு போய்ச் சேர நமக்கு ஒரு வருடம் அல்லது ஒரு தவணை போதாமல் இருக்கலாம்... ஆயினும் நாம் அங்கு போய்ச் சேருவோம் என்பதில் இன்றிரவு எனது நம்பிக்கை மேலும் வலுப்பெற்றுள்ளது. ஆகவே நீங்கள், நாங்கள் அனைவரும் ஒரே மக்களாக அங்கு போய்ச்சேருவோம் என்று உறுதி அளிக்கின்றேன்"

ஜனவரி 20 இல் பராக் ஒபாமா அமெரிக்க அதிபராகவும் ஜோபைடன் துணை அதிபராகவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டபோது ஜனநாயகக் கட்சியினர் 1994க்குப் பின் முதன் முறையாக வெள்ளை மாளிகையையும் காங்கிரஸையும் ஒருமித்து தங்கள் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

பராக் ஒபாமாவின் வெற்றியைத் தொடர்ந்து அவருக்கு வாழ்த்துக்கள் அலை அலையாகக் குவிந்தவண்ணமிருந்தன.

உலகத் தலைவர்கள் ஒருவருக்கொருவர் முண்டியடித்துக்கொண்டு வாழ்த்துச் செய்திகளை அனுப்பினர்.


இங்கிலாந்து பிரதமர் கோர்டன் பிரவுண் பிரான்ஸ் அதிபர் நிக்கலஸ் சர்கோஜி ஜேர்மன் அதிபர் அஞ்சலா மேர்க்கல் ஆகியோர் அவரை வாழ்த்துவதில் முனைந்து நின்றனர். ஒபாமாவின் தேர்தல் வெற்றிக் களிப்பு உலகம் முழுவதும் பரவி கரை புரண்டோடி யது.

எனினும் கசப்பான குறிப்பு ரஷ்ய அதிபர் டிமிற்றி மெட்வடேவ் அவர்களிடமிருந்து வந்தது.

கிழக்கு ஐரோப்பா மீது யு.எஸ் போடவிருந்த ஏவுகணைத் தடுப்புக் கவசத்திற்கு எதிராகப் போலந்து எல்லை நெடுக ரஷ்யா ஏவுகணைகளை நிறுவப்போவதாக அறிவித்தது. ஒபாமாவுக்கு முதல் சவால் இது.

2008 நவம்பர் 5இல் யு.எஸ். ஏவிய ஏவுகணை ஆப்கானிஸ்தானில் கல்யாணக் கொண்டாட்டமொன்றில் பங்குபற்றியவர்களில் 37 பேரைப் பலிகொண்டது. அந்நாட்டின் அதிபர் ஹமீட் கர்ஜாய் கர்ச்சித்தார்.

"அமெரிக்காவின் புதிய அதிபரிடம் நான் விடுக்கும் முதல் கோரிக்கை இதுதான். அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வதை உடனடியாக நிறுத்துங்கள்" என்பதே.



அமெரிக்க மக்கள் முன்னிலையில் ஒபாமா உரையாற்றும்போது...

முன்னைய அதிபர் புஷ் ஒபாமாவின் வெற்றி பற்றிக் குறிப்பிடும் போது,

"ஒரு கனவு நனவாகிறது. நேற்று அரங்கேறிய வரலாறு பற்றி அமெரிக்கர்கள் மிகவும் பெருமையடைகி றார்கள். அதிபர் ஒபாமா தன் மனைவி மிஸேல் சகிதம் அவர்களின் அழகான பெண் குழந்தைகளோடு வெள்ளை மாளிகையின் கதவு கள் ஊடாக உலாவரும் காட்சி எல்லோர் மனத்திலும் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் புத்துணர்வூட்டும் இத்தருணத்திற் காக கோடிக் கணக்கான அமெரிக்கர்கள் நீண்டகாலம் காத் திருந்தார்கள். அத்தருணம் கிட்டியதும் அவர்கள் உற்சாகத்தாலும் பெருமிதத்தாலும் மூழ்கடிக்கப்படுவர்" என்று எதிர்வு கூறினார்.

ஜோன் மக்கயின், ஒபாமாவை எதிர்த்துப் போட்டியிட்ட குடியரசுக் கட்சி வேட்பாளராவார். அவர் மிகப் பெருந் தன்மையோடு தன் தோல்வியை ஏற்றுக் கொண்டு பின்வருமாறு கூறினார்.

"நண்பர்களே! மிக நீண்ட பயணத்தின் முடிவுக்கு நாம் வந்து விட்டோம். அமெரிக்க மக்கள் பேசி விட்டார்கள். மிகத் தெளிவாகவே பேசியுள்ளார்கள்" ஒபாமாவின் பெயரை அவர் குறிப்பிட்டபோது கூட்டத்திலிருந்து கூச்சல் கிளம்பியது. தனது கையசைவால் அதைத்தடுத்து அமைதி காத்து தொடர்ந்தார்.

"எனது போட்டியாளர் கோடிக்கணக்கான அமெரிக்க மக்களின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வெற்றி கொண்டு ள்ளார்" என்று.

ஜம்பொன்

ஒபாமா மக்கள் மீதான வரிகளை குறைத்து சுகாதார சேவையை விரிவாக்கம் செய்வதாக வாக்குறுதி வழங்கியுள்ளார். அவரின் முதனிலைப் பணி ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கப் படைகளை திரும்ப அழைத்தலே தான். (தொடரும்)

# கைது என்ற பெயரில் கடத்தல்கள் இடம்பெறுவது அரசாங்கத்துக்கு ஏற்புடையதல்ல

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்திடம் இருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே மாதந்தோறும் அவசரகாலச் சட்டத்திற்கு பாராளுமன்ற அங்கீகாரம் வழங்கப்படுகின்றது.

இதனை அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் பயன்படுத்தக்கூடாது. இது இந் நாட்டின் ஜனநாயகத்துக்கே விரோதமானது என ஜே.வி.பியின் பாராளுமன்ற குழுத்தலைவரும் குருணாகல் மாவட்ட எம்.பியுமான அனுரகுமார திசாநாயக்க தெரிவித்ததார்.

கைது என்ற பெயரில் கடத்தல்கள் இடம்பெறுவது யாருடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

கோட்டேயில் அமைந்துள்ள சோலிஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே சுடர்ஒளி ஆசிரியர் என். வித்தியாதரன் கைது சம்பந்தமாக ஊடக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவினால் தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அனுரகுமார திசாநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சரின் கூற்றுப்படி விசேட கைதுகளின் போது வெள்ளை வான் பயன்படுத்தப்படுவதாக கூறுவதானால் ஏற்கனவே நடைபெற்றுள்ள வெள்ளை வான் சம்பவங்கள் தொடர்பிலும் சந்தேகங்கள் நிலவுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து அனுர எம்.பி.மேலும் கூறுகையில்,

பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படுகின்ற அவசரகாலச் சட்டமானது முறையாக பேணப்பட வேண்டும்.

பாதுகாப்புத் தரப்பினரும் அரசாங்கமும் இதனைப் பொறுப்பற்ற தன்மையுடன் பயன்படுத்தக் கூடாது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்யும் போது சட்டத்தின் விதிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். கைதுகள், கடத்தல்களாக நடைபெறுவது ஜனநாயக அரசாங்கத்திற்கு ஏற்புடையதல்ல. கைது என்ற பெயரில் அல்லது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கை என்ற தோரணையில் வெள்ளை வானில் கடத்துவதென்பது அல்லது ஏற்றிச் செல்வது யாருடைய தேவையை நிறைவு செய்வதற்கு என்ற கேள்வியும் எழுகின்றது.

மக்களின் மத்தியில் நடைபெறுகின்ற இத்தகைய சம்பவங்கள் நாட்டின் ஜனநாயகத்துக்கே ஆபத்தானதும் விரோதமானதுமாகும். நினைத்த மாத்திரத்தில் நடைமுறைப்படுத்துகின்ற சட்டவிதிகளை மீறிய செயற்பாடுகள் எக்காரணத்தைக் கொண்டும் சாதாரணமானதாக எடுத்துக்கொள்ள முடியாது.

இதுதொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சட்டவிதிகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக பொறுப்புள்ள துறைகள் தீர்மானிக்க வேண்டும்.

அதற்கு அப்பால் செல்கின்ற அனைத்து நடவடிக்கைகளும் ஜனநாயகத்துக்கு விரோதமானதாகும். அத்துடன் பாரதூரமானதும் ஆகும் என்றார். (ஓ-5)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த முதியவர் மரணம்

மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முதியவர் நேற்று திங்கட்கிழமை காலமானார்.

இச்சம்பவத்தில் கரணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த மார்கண்டு-பெருமாள் (வயது 63) என்பவரே காலமாணவர் ஆவார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது, பிரஸ்தாப நபர் கடந்த வெள்ளிக்கிழமை கரவெட்டி பிரதான வீதியூடாக மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த வேளை, அதிவேகமாக இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து முதியவர் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளனர்.

இதனால் தலையில் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முதியவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றிரவு மரணமடைந்துள்ளார். (ஓ-7)

# இலங்கை விடயத்தில் மேற்குலக நாடுகளின் ஆலோசனைகளை கேட்க வேண்டிய அவசியமில்லை

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

விடுதலைப் புலிகளையும் பிரபாகரனையும் பாதுகாக்க இந்தியா பலாத்காரத்தை பிரயோகிக்குமானால் 1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூழ்நிலை உருவாகும். தேசப்பற்றாளர்கள் இந்தியாவிற்கு எதிராக வீதியில் இறங்குவார்கள்.

சீனா, ரஷ்யா, வியட்நாம் நாடுகளின் ஆதரவு எமக்கிருக்கின்றது. எனவே ஐ.நா. பாதுகாப்பு சபையில் எந்தப் பிரேரணை கொண்டு வந்தாலும் இலங்கையை ஆட்டுவிக்க முடியாது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தை இலங்கை அரசாங்கம் ஏற்க வேண்டுமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளமை ஐ.நா.சபையில் ஹோம்ஸ் வெளியிட்ட தகவல்கள் தொடர்பில் அரசாங்கத்தின் பிரதான பங்காளிக்கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கையிலேயே சுற்றுச்சூழல் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, விடுதலைப் புலிகள் தோல்வியின் விளிம்பில் உள்ளனர்.

இந்தச் சூழலில் யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை. புலிகளின் யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தை இந்தியா வலியுறுத்துவது உலகளாவிய ரீதியில் அந்நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும்.

இதற்கு முன்பும் இந்தியா பலாத்காரத்தை பிரயோகித்து பிரபாகரனை பாதுகாத்தது. அதே செயலை இன்றும் செய்வதற்கு முனைந்தால் 1987 ஆம் ஆண்டைப் போன்று தேசப்பற்றாளர்கள் இந்தியாவுக்கு எதிராக வீதியில் இறங்குவார்கள். இந்திய எதிர்ப்புப் போராட்டங்கள் வெடிக்கும்.

இலங்கை இறையாண்மை கொண்ட சுயாதீனமான நாடு. எனவே எமது பிரச்சினையில் தலையிட பிரிட்டனுக்கோ அல்லது வேறெந்த மேற்குலக நாடுகளுக்கோ அதிகாரமில்லை. அவர்களது ஆலோசனைகளை கேட்க வேண்டிய தேவையும் எமக்கில்லை.

இந்த மேற்குலக நாடுகள் தான் புலிகளுக்கு விமானங்களையும், தொழில்நுட்ப வசதிகளையும் வழங்கின. எனவே, மேற்குலக நாடுகளின் பேச்சைக் கேட்க நாம் தயாரில்லை.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் இலங்கைக்கு எதிராக எந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் கவலைப்படப் போவதில்லை. எம்மை அசைக்க முடியாது என்றார். (ஓ-5)

# ஏழு பாடசாலை அணிகள் மோதும் 50 ஓவர்கள் கிரிக்கெற் சுற்றுத் தொடர்

## முதல் சுற்று ஆட்டங்கள் இன்று ஆரம்பம்

(வட்டுக்கோட்டை)

யாழ்.மாவட்டப் பாடசாலை கிரிக்கெற் சங்கம் நடத்தும் தெரிவுசெய்யப்பட்ட ஏழு பாடசாலைகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட விலகல் முறையிலான கிரிக்கெற் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

நடந்து முடிந்த பாடசாலை அணிகளுக்கிடையலான கிரிக்கெற் பருவகாலத்தில் விளையாடிய போட்டி முடிபுகள் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு ஏழு பாடசாலைகள் இச் சுற்றுப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

இவ்வாறு புள்ளிகளின் அடிப்படையில் யாழ்.மத்திய கல்லூரி, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மற்றும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஆகிய ஏழு அணிகள் தெரிவாகியுள்ளன.

சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் முதல் சுற்று ஆட்டங்களில் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி அணியும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும் மோதுகின்றன.

சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் கொகுவில் இந்துக் கல்லூரி அணியும் மோதுகின்றன.

மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியும் மோதுகின்றன.

இச் சுற்றில் வெற்றி பெறும் அணிகளுடன் நாளை மறுதினம் நடைபெறும் இரண்டாவது சுற்றிற்குத் தெரிவாவதுடன் யாழ். மத்திய கல்லூரி அணி நேரடியாக இணைத்துக்கொள்ளப்படும். இச்சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (5-27)

# சங்கானை கல்வி கோட்ட தடகளப் போட்டிகள்

(வட்டுக்கோட்டை)

சங்கானைக் கல்விக் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகள் நாளை மறுதினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னஸ் மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

மூன்று நாட்களுக்கு நடைபெறும் இத் தடகளப் போட்டிகளின் முடிவில் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது. (5-27)

# சங்கானை சிவப்பிரகாச ம.வி. கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

(வட்டுக்கோட்டை)

சங்கானைக் கல்விக் கோட்ட மட்டத்திலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் 17, 19வயது பெண்கள் பிரிவுகளில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயமும் 15 வயதுப் பெண்கள் பிரிவில் அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலையும் வென்று சம்பியனாகின்.

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15 வயதுப் பெண்கள் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அணியை வீழ்த்திய அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசாலை சம்பியனாகியதுடன் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தையும் சித்தன்கேணி சிறிகணேசா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

17 வயதுப் பெண்கள் பிரிவு இறுதிப் போட்டியில் வட்டு இந்துக் கல்லூரி அணியை வென்ற சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் சம்பியனாகியதுடன் இரண்டாமிடத்தை வட்டு இந்துக் கல்லூரி அணியும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

சுற்றுப் போட்டியின் 19 வயதுப் பெண்கள் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் வட்டு இந்துக் கல்லூரி அணியை வென்று சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் சம்பியனாகியதுடன் வட்டு. இந்துக் கல்லூரி அணி இரண்டாமிடத்திற்கும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி மூன்றாமிடத்திற்கும் தெரிவாகின. (5-27)

# ஆறாம் கட்டமாக திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நோயாளர்கள்

## 282 பேரின் பெயர் விபரங்கள்

ரி. நிர்சனா- (வயது 9), மாங்குளம், ரி. கவிப்பிரியா -(வயது 7 மாதம்), மாங்குளம், ரி. சிவமணி- (வயது 30), மாங்குளம், ரி. சிவஜகம்- (வயது 4), மாங்குளம், ரி. சிதுயா- (வயது 7), மாங்குளம், ரி. அன்ரியம்மா- (வயது 39), மாங்குளம், எஸ். சுஜேதனன்- (வயது 14), வற்றாப்பளை, எஸ்.வசந்தா தேவி - (வயது 40), வற்றாப்பளை, பி. சேது நாயகி -(வயது14 ) முரசுமோட்டை, கே. பஞ் சாட்சரம் -(வயது 72), முரசுமோட்டை, எஸ். குருசேனா- (வயது 21) ,மாங்குளம், சித்திர ரசேனா- (வயது 25) மாங்குளம், எ.பொன் னுத்துரை-(வயது 95),மாங்குளம்.

கே. ரசீன்குமார்- (வயது 33) பூநகரி, ஏ. செல்வராசா- (வயது 58) விஸ்வமடு, சிவபாத சுந்தரம் -(வயது 34) பருத்தித்துறை, எஸ். செபஸ் டின்- (வயது 68) விஸ்வமடு, கே. பிரபாகரன் -(வயது 33) முரசு மோட்டை, பி. ஏப்ரம்- (வயது 14), அக்கராயன் குளம், ஆர் மதுமலோ ஜினி -(வயது 23) பூநகரி, கே. அன்னபூரணம் -(வயது 56) பூநகரி, வி. தர்மலிங்கம்- (வயது 67) பொக்கனை, கே. நாகநாதினி- (வயது 26) முல்லைத்தீவு.

கே.விதுஷா -(வயது 2) , முல்லைத்தீவு, என். நவநீதன்-(வயது 26)வையா மடம் ,என். அன்புஜன்- (வயது34) முத்தை யன் கட்டு, பி. செல்வமதி -(வயது 33) முத்தை யன் கட்டு, யு. குவிந்தன் -(வயது 5) இரணை பாளை, யு.சித்ரா -(வயது 30) இரணை பாளை, யு.தனுசன்- (வயது 8)இரணைப் பாளை , பி. தவயோகராஜா- (வயது 42), மாத் தளன், நவரத்னம் -(வயது 75), கட்டக்காடு, எஸ். மாணிக்கராசா- (வயது 72) முல்லைத் தீவு.

என். உமாநிதினி (வயது 25), கிளி நொச்சி, நவரசன்- (வயது 3 மாதம்) கிளி நொச்சி, கே. மகேந்திரநாதன் கிளிநொச்சி, ஆர். சொக்க லிங்கம் -(வயது 64), பொக்கணை , ஆர்.ரோசம் மா-(வயது 83), பொக்கணை, எஸ்தம்பையா- (வயது 64), என். சண்முகநாதன் -(வயது 35) வட்டக் கச்சி, எஸ். சுப்ரமணியம்- (வயது 71), பொக் கணை, எஸ். நசீதா, வி. ராதா -(வயது - 36), கிளி நொச்சி, வி. அஜந்தன்- (வயது 5) கிளிநொச்சி, ஏ. மரியதாஸ்.- (வயது 74) வளையார்மடு, ரி. யோகராசா -(வயது 40) பளை, ஆர். வேலாயுதன், எஸ். நடராசா, எஸ். கோகிலதேவி- (வயது 35) உருத்திரபுரம், எஸ். கிஷாந் -(வயது 9) உருத்திரபுரம், யசிதா, எஸ். பதிதனன், என். லட்சுமி, சி. சாருபஸ், எஸ். குலசிங்கம், எஸ். சாந்தி - (வயது 79) மல்லாவி, கே. பசுபதி- (வயது 87) நெடுங் குளம், எஸ். ஜனசுந்தரி-(வயது 55),கிளிநொச்சி.

எஸ். அழகராணி -(வயது 40), ஆர். சுந்தலிங்கம்- (வயது 45), மல்லாவி, ஜெகதீஸ்வரி -(வயது 33), பளை, ஜஜந்தினி - (வயது 5), பளை, ஜே. துசீபன்- (வயது 2) பளை, என். சுகந்திரன்- (வயது 69), புதுக் குடியிருப்பு, எஸ். அலெபன்- (வயது 5) புதுக் குடியிருப்பு, ஆர். மகேஸ்வரி -(வயது 67), ரேவதி, எஸ். ஜரின்னன் (வயது 16) , புதுக்குடியிருப்பு, சகாயநாதன்- (வயது47), புதுக்குடியிருப்பு, ஆர். ரேணுகா - (வயது 15),யாழ்ப்பாணம்..

ஏ. அன்னலஸ்மி -(வயது 58) மாத் தளன், டினோஜினி- (வயது 8) இரணைப் பாளை, ஆர். நிவேதா- (வயது 10), இரணைப் பாளை, டி. ஜனம்மா -(வயது 60), யாழ்ப் பாணம், ரி. ராஜேஸ்வரி- (வயது 31), யாழ்ப்பாணம், ரி. டிலுக்சன் -(வயது 1), ரி. ஜன்சியா- (வயது 3), ஜே. ஜயபாலன் (வயது 33), பொக் கணை, பிரதியசீன்- (வயது 2 மாதம்) பொக் கணை, சரஸ்வதி -(வயது 36) கிளிநொச்சி, யு. சிவாஜினி- (வயது 30) முல்லைத்தீவு.

ஜே. சிவமணி -(வயது 50) வளை யார்மடம், யு. கிஷாளன் -(வயது 4) வளை யார்மடம், மகிதா -(வயது 4) பளை, சத்திர உதயம்- (வயது 54) பளை, எஸ். மீனாட்சி- (வயது 69), விஸ்வமடு, பி. சந்திரவதி- (வயது 32) மாத்தளன், பி. அநு வேரராசன் -(வயது 2), மாத்தளன், பி. கயல்விழி- (வயது7) மாத்தளன், ஜ. மருதனார் -(வயது 73) வன்னிக் குளம் கிளி நொச்சி, முனியாண்டி -(வயது 71), சோம சுந்தர் வீதி, யாழ்ப்பாணம், வள்ளியம்மா -(வயது 53) வள்ளிபுரம் புதுக்குடியிருப்பு, என். புவனேஸ்வரி -(வயது 52) ஆனந்தநகர், கிளிநொச்சி, ஆர். மகேஸ்வரி- (வயது 67) பூநகரி, கே. ரா சை யா- (வயது 59) புதுக்குடி யிருப்பு, ரி. சிவபாக் கியம் -(வயது 77) அச்சு வேலி, ரி. சச்சிதா னந்தம் -(வயது 66) சாவ கச்சேரி யாழ்ப் பாணம், வை. யோகரூபன் -(வயது 15) மாங் குளம், எஸ். சின்னராஜா -(வயது 60) முரசு மோட்டை, கிளிநொச்சி.

அருபு தம்பிநாதன்- (வயது 73) இயங்குளம் மல்லாவி, ரி. திலகவதி -(வயது 72), மல் லாவி, லெயனிஸா -(வயது 8) வட்டக்குளம், முள்ளியவளை, ரி. ஜெகதீஸ் வரி -(வயது 39) கடவேலி, மல்லாவி, எஸ் நாகலிங்கம் -(வயது 64) வையோக சுகந்தினி -(வயது 10), மாங்குளம், யோகதர் சினி -(வயது 12), மாங்குளம், எஸ். யோக நாதன் -(வயது 51), மாங்குளம், வை. யோக மதுசன் -(வயது 5), மாங்குளம், எஸ். சிவதர் சினி -(வயது 31), மூங்கிலாறு, எஸ். கலைக் குமரன்- (வயது 8 மாதம்) மூங்கிலாறு.

எஸ் சின்னத்துரை -(வயது 81), கிளி நொச்சி, பி. ராசையா- (வயது 65), திருவை யாறு, கே. ரேஜா -(வயது 33) மாத்தளன், வற்றாப்பளை, கே. பவிஷா -(வயது 4 மாதம் , மாத்தளன், ஆர். குவின்ஷி -(வயது 28) பூநகரி, , எம். சின்னமலர்-(வயது 56) பூநகரி,யு.ஜெயந்தி -(வயது 36), கந்தபுரம், யு.சருஷன்- (வயது 8மாதம்), கந்தபுரம், கே.ஶ்ரீரம்மியா(வயது4),கந்தபுரம், ஜி.பிர தீபா- (வயது 26), மாரங்குளம், கே. ஜெயந்த



பத்மினி -(வயது53), கிளிநொச்சி, பி. பொன் னம்பலம்- (வயது67), மாத்தளன், ஜே. லோகினிதேவி -(வயது25), பொக்கனை, என். சரஸ்வதி- (வயது 60), புதுக்குடியிருப்பு, மாது -(வயது8 மாதம்), புதுக்குடியிருப்பு, ஜி. அந்தோனிப்பிள்ளை -(வயது 90), கிளி நொச்சி, ஏ. அபிராமி- (வயது 29), இணு வில், ஏ. கோபிஷன் -(வயது 4), ஏ. கோபிகா -(வயது 2), இணுவில், பி. முருகேசன்- (வயது 77), யாழ்ப்பாணம், ஜே. சரஸ்வதி- (வயது65), புதுக்குடியிருப்பு, எஸ். வர் ஷிக்கா- (வயது 2), புதுக்குடியிப்பு, எஸ். மேகலா- (வயது 27), புதுக்கு டியிருப்பு, கே. உமாதேவி- (வயது 65), திருகோணமலை, ஆர். கலியுகவரதன் -(வயது 68), திருகோ ணமலை, ரி. வைஷ் ணவி -(வயது 1 1/2) மாத் தளன்.

ரி. சங்கியா- (வயது 27), மாத்தளன், சொய்ட் -(வயது 77), தேவிபுரம், எஸ். சூசை நாயகம் -(வயது 53), அடம்பன், தெய்வநாயகி -(வயது 66), மாத்தளன், ஜே. சின்னப் பிள் ளை -(வயது 73), கிளிநொச்சி, எஸ் வல்லசாமி -(வயது 71), மன்னார், எல். நாகமணி- (வயது 68), யாழ்ப்பாணம்), என். குகனேஸ்வரி -(வயது 29), முள்ளியவளை, எம். ஜெதுஷா -(வயது 21/2), முள்ளியவளை, ஜே. அன் னலக்சுமி -(வயது 35), மாத்தளன், எஸ். வித்யாலிங்கம்- (வயது 92), பரந்தன், யு. குகன்யன்- (வயுது 22), வவுனியா, ஜீ. சுத ர்ஷா -(வயது 11), கிளிநொச்சி, ஜீ. சித்ராதேவி -(வயது 40), கிளிநொச்சி, ஜீ. லக்ஷகா -(வயது 7), கிளிநொச்சி, ரி. மிதோமியா -(வயது 84), மன்னார், எம். மரியதாஸ், (வயது 78), மன்னா.

அனுராஜா-(வயது 18), பூந கரி, எஸ். செபமாலை- (வயது 69), மன்னார், அருளானந்தன்- (வயது 85), மன்னார், ஆர். யோகமலர் -(வயது 58), உருத்திரபுரம், ஆர். தவச்செல்வி -(வயது 33), உருத் திரபுரம், ரத்னசிங்கம்- (வயது 62), புதுக் குடி யிருப்பு, எஸ். கதிரேசன்- (வயது 64), பூங் கேணி, எஸ். சதிராதேவி- (வயது 65), பரந் தன், பி. ராசகணிகா- (வயது 52),இர்ணைப் பாளை, பீ. பாலராஜினி -(வயது 25), இரணைப் பளை, கே. ரீஷ்வரி -(வயது 60), முருகண்டி, எஸ். தங்கமலர் -(வயது 44), துணுக்காய், முல்லைத் தீவு, பபிகா -(வயது 14), துணுக்காய், முல்லை த்தீவு, எஸ். ஶ்ரீகா ந்தன்- (வயது 60), திருநகர், கிளிநொச்சி, வி. செல்விதி -(வயது 25), கோவிலடி, தம்பலகாமம்.

நிலோஷன் -(வயது 4 1/2), கோவிலடி, தம்பலகாமம், பி. அன்னப் பிள்ளை -(வயது 56), காத்தான்குளம், மன்னார், ஏ. சியாமளா- (வயது 27), மன்னார், அபி நயா -(வயது 3 1/2), மன்னார், கே. மலர் மதி -(வயது - 44), தம்பலகாமம், திருகோண மலை, விக்டோரியா- (வயது 47), குமண குளம், அடம்பன், ரி. கவிரிக்ஷன் -(வயது 28), கிளிநொச்சி, எழிலன் -(வயது 1), கிளி நொச்சி, கே. சாந்தி -(வயது 29), இரணை பாளை, சீதுன் பீபீ -(வயது 62), பலாங்கொடை, காதர் மொஹிடீன் -(வயது 72), வன்னிக் குளம், முல்லைத்தீவு, அஞ்சலிங்கம்- (வயது 80), ஆகடவேலி, கிளிநொச்சி, செபஸ்தியன் பிள்ளை -(வயது 50), வலையார்மடம், பாஷையூர், கருணா நிதி -(வயது 68), நல்லூர், யாழ்ப்பாணம், இந்தி ராணி -(வயது 80), வவுனியா, சி. சந்திர குமாரி, -(வயது 31), துணுக்காய், முல் லைத்தீவு, எஸ். தனுஷா -(வயது 19), இர ணைபாளை, சி. சந்திரசீலன் -(வயது 31), துணுக்காய், முல்லைத்தீவு, சி. சண்முக நாதன்- (வயது 50), இரணை பாளை, எஸ். சறோஜினிதேவி -(வயது 49), இரணை பாளை, வி. பராசக்தி -(வயது70),சாவகச் சேரி, யாழ்ப்பாணம்.

ரி. தனுஷா- (வயது 33), உதயநகர், கிளிநொச்சி, தர்ஷிகா -(வயது 5), உதயநகர், கிளிநொச்சி, திலோ யன்- (வயது 3), உதயநகர், கிளிநொச்சி, கே. புஷ்பவதி -(வயது 72), நல்லூர், பூநகரி, பி. நாகம்மா -(வயது 63), இரணைபாளை, மகிலினி -(வயது 5), கிளிநொச்சி, வி. ராதிகா -(வயது 40),ரி. செல்வகுமார்- (வயது 21), கர வெட்டி, எஸ். சஜீவா -(வயது 7), கிளிநொச்சி, எஸ். ஜங்கரன்- (வயது 9), கிளிநொச்சி, எஸ். அலோசெல்வி- (செல்வி 2), கிளிநொச்சி, எஸ். புஸ்பமலர் -(வயது34) ,கிளிநொச்சி, கே. சிவதேவி -(வயது 50), வி. பொன் னம்மா -(வயது 77), முல்லைத்தீவு, எம். சரஸ்வதி -(வயது 64), கல்மடு, வி. முத் துப்பிள்ளை - (வயது 63), கிளிநொச்சி, எஸ்.அன்னம்மா -(வயது 77), காங்கேசன் துறை, ஜே. விஜயகுமாரி -(வயது 41), முழங் காவில், ஜே. ஜெயமனோகரன்- (வயது 41), முழங்காவில்.

ரி. மல்லிகாதேவி -(வயது 41), குமிழமுனை, கே. பரமேஸ்வரி-(வயது 73), புத்தூர், எஸ். அன்னம்மா -(வயது 74),குமிழ முனை, ஜே. வள்ளியம்மா-(வயது62), கிளி நொச்சி, கே.சேதுப்பிள்ளை -(வயது 79), நாகுளம், எஸ். அன்னீசன் -(வயது 73), கிளி நொச்சி, எஸ். கருப்பையா -(வயது 53), முல்லைத்தீவு, ஏ. புஷ்பலிலா -(வயது 59), பளை, எஸ். பெருமாள் -(வயது 69), மாத் தளன், பே. பிரமவன்- (வயது 7), மல்லாவி, கே. தயாளினி- (வயது 37), மல்லாவி, பாக் கியம் -(வயது 57), பளை, வி. சண்முகம் -(வயது 72), மன்னார், ரி. ஞானசேகரம், -(வயது 49), புதுக்குடியிருப்பு, ராஜேஸ்வரி -(வயது 55), புதுக்குடியிருப்பு, எஸ். வேத நாயகம் (வயது 68), மன்னார், அம்பிகாவதி -(வயது62), மன்னார்.

பத்திரகாளி -(வயது 58), மன்னார்வீதி, அடம்பன், சாயம்பூ -(வயது 72), மன்னார் வீதி, அடம்பன், எஸ். ராசதுரை- (வயது 55), கல்லாறு, கிளி நொச்சி, ஏ. எலிசபெத்- (வயது 74), முழங் காவில், எம். ஆரோக்கியம் -(வயது 72), முழங்காவில், தயானந்தராஜா -(வயது 34), பல்லவராயன் குளம், நிலவன்-(வயது 11/2), கிளிநொச்சி, சாலினி- (வயது 6), கிளி நொச்சி, சாரீஷன் -(வயது 3),பல்லவராயன் குளம், ஜெயாலினி- (வயது 9), பல்லவ ராயன் குளம், நாரேன்- (வயது 8), இரணை பாளை.

கிருஷ்ணகுமார் -(வயது 32), இரணை பாளை, கே.தயாகரன்-(வயது30 ), பளை, என். கண்மணி-(வயது 70), பொக் கணை, கே.பரமேஸ்வரி-(வயது 62), வவு னியா, ரி.பரமேஸ்வரி-(வயது 65), முல்லைத் தீவு, ரி.கமலா-(வயது 60), தண்ணீர் ஊற்று, ரி.செல்லம்மா-(வயது 70), பாரதிபுரம், ஆர்.கண்மணி- (வயது 63), வவுனியா, கே.இராசையா-(வயது 62), தர்மபுரம், வி.பிர தீஸ்-(வயது 13), புதுக்குடியிருப்பு.

எஸ்.விம லநாதன்-(வயது 41), புதுக்குடியிப்பு, எஸ்.செல் வராசா-(வயது65), மாத்தளன், என்.யோகநா தன்-(வயது 65), யாழ்ப்பாணம், கே.முத் தம்மா -(வயது 63), கிளிநொச்சி, வி.பார்வதி பிள்ளை-(வயது 70), யாழ்ப்பாணம், கி.கித் திலாகாவதி-(வயது 65), நெடுங்கேணி, எஸ்.சிவஞானம்-(வயது 60), நெடுங்கேணி , கே.கண்மணி-(வயது 49), அடம்பன், அவி ஜின் பெரேரா-(வயது 74), அடம்பன், மன் னார்.

இந்துரேஸ்வரி-(வயது 60), கதிரேசன் வீதி, வவுனியா,கிரிதரன்-(வயது 49), நெடுங் கேணி,வவுனியா,சிவகங்கை-(வயது 70), முகமாலை,என். சாரதா தேவி-(வயது 56), வட்டக்கச்சி, ஆர் .வைத்திலிங்கம்-(வயது 87), குஞ்சுப் பரந்தன்,ரி.குணசீலன்-(வயது 70), திருவையாறு.

திருநாவுக்கரசு- (வயது 60), பளை, எஸ்.வீரசிங்கம்-(வயது 82) , மீசாலை, என் .இராசம்மா-(வயது 62), வட்டக் கச்சி, பி.கோணேஸ்வரி,-(வயது 35), தர்ம புரம், பி.சஜீவன்-(வயது 4),தர்மபுரம், பி.கலை யரசி-(வயது8),தர்மபுரம், பி.கஜல் விழி-(வயது8),தர்மபுரம்,ஏ.கந்தசாமி-(வயது 73),மாங் குளம்,எம்.அரசம்மா-(வயது 63), தர்மபுரம், ரி.நாகராணி-(வயது 50), மன்னார்,எஸ். வைத்திலிங்கம்-(வயது 56),வவுனியா, கே.முரு கையா-(வயது 63), கிளி நொச்சி,ஏ. தவராசா-(வயது 52),மன் னார்,ஏ.யுவனீஸ்-(வய்து 62),புன்னை நீராவி, எஸ்.தர்மராசா-(வயது 56),புதுக் குடியி ருப்பு,ரி.துரைராசா-(வயது 56), கிளிநொச்சி, ரி.கந்தவனம்-(வயது 80), யாழ்ப்பாணம்.

# வருமுன் காப்போம்...



நாகரீகம் வளர வளர மனிதனுக்கு வித விதமான நோய்களும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. விஞ்ஞான கண்டுபிடிப்புகளில் குறுகிய காலத்தில் உற்பத்தி செய்யும் உணவுகளையும், இரசாயனம் கலந்த உணவுகளையும் சாப்பிடுவதால் உணவு போல் தன் ஆயுளையும் சுருக்கிக் கொண்டு தினமும் செத்துச் செத்து பிழைத்துக் கொண்டிருக்கின்றான்.

*நோயின்றி நூறாண்டு வாழ்ந்த முன்னோர்கள் எங்கே? தினமும் 10 மாத்திரைகள் விழுங்கும் நாம் எங்கே?*

**ஏன் இந்த மாற்றம்..?**

நவீனத்தின் புதுமைதான் இது. அதிக மன உளைச்சல், ஓய்வில்லாத உழைப்பு, தீய பழக்கங்களுக்கு அடிமை என பலவாறானவை மனிதனுள் புகுந்து இப்படி ஆட்டிப் படைக்கின்றன.

அரைவேக்காட்டு உணவு, எண்ணெயில் பொரித்த உணவுகள், டின்களில் அடைக்கப்பட்டு பதப்படுத்தப்பட்ட உணவுகள், கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகள், போதிய உடற் பயிற்சியின்மை, இவை தான் மனிதனை அதிகம் பாதிக்கின்றன.

உடம்பிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் மனிதனின் செயல்பாட்டுக்கு முக்கிய காரணிகளாகின்றன.

மனிதனின் செயல்பாடுகளில் முதன்மை வகிப்பதும் தாயின் கருவில் இருக்கும் போதே துடிக்க ஆரம்பித்து இறுதிவரை துடித்துக் கொண்டிருக்கும் ஒரே உறுப்பு இதயம் தான்.

ஒவ்வொரு மனிதனின் கைப்பிடி அளவே இதயம் உள்ளது. 350 கிராம் எடை கொண்ட நிமிடத்திற்கு 72 தடவை துடிக்கும்.

60 வயதிற்குள் ஒரு மனிதன் இதயம் ஆச்சரியப்படும் வகையில் 22 000 இலட்சம் தடவை துடிக்கிறது. சுமார் 18 ஆயிரம் தொன் இரத்தத்தை உள்ளிழுத்து வெளியேற்றுகிறது. இந்த இரத்தம் செல்லும் நாளங்கள் சுமார் 62 ஆயிரம் மைல் நீளமுள்ளவை.

இப்படி பல அதிசயங்களை தன்னகத்தே கொண்ட இதயமானது நாடி, நாளமாக அமைந்து நான்கு அறைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நல்ல இரத்தத்தை உடலெங்கும் நாடி எடுத்துச் செல்கிறது. நாளம் அசுத்த இரத்தத்தை இதயத்திற்கு எடுத்துவரும் செயல்களைச் செய்கிறது. இவ்வாறு இதயம் நிமிடத்திற்கு 72 முறை சுருங்கி விரிகிறது.

இந்த சுருங்கி விரியும் தன்மையின் அழுத்தமானது 120/80 என்ற கணக்கில் இருக்கும். டென்ஷன், மன அழுத்தம், மன எழுச்சி மிகுதியாகும் போது அழுத்தம் அதிகரிக்கும். ஓய்வெடுக்கும் போது சற்று குறைந்து காணப்படும்.

கூடும் குறையும் இந்த இரத்த அழுத்த உடலமைப்பையும் வயதையும் பொறுத்து மாறும்.

இரத்த நாளங்களில் கொழுப்புகள் படிவதால் இரத்த ஓட்டத்தின் தன்மையைக் குறைக்கிறது. இதனால் இயத்திற்கு தேவையான இரத்தம் கிடைப்பதில்லை. இதயம் அதிகம் சுருங்கி விரிய ஆரம்பிக்கும்.

இந்த காலத்தில் வாய்வுக்களின் சீற்றம் மிகுதியானால் பித்தம் அதிகரித்து பித்த நீர் இரத்தத்தில் சேர்வதால் இருதயத்தின் சுருங்கி விரியும் தன்மையை சீர்கேடடையச் செய்கிறது. இதனால் இருதய அடைப்பு ஏற்படுகிறது. இதனால் சிலர் சில நொடிகளில் மரண வாசலை நெருங்க நேரிடுகிறது.

***இதய நோய் தாக்குவதை சில காரணிகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.***

**மார்புவலி**

சிலருக்கு மார்பின் இடது பக்கத்தில் வலி வந்தவுடன் மாரடைப்பு என பயம் கொள்கின்றனர். மாரடைப்பானது இதயத்திலோ, மார்பின் இப்பகுதியிலோ தோன்றுவதில்லை. வயிற்றில் அஜீரணக் கோளாறு ஏற்பட்டு வாயு சீற்றமாகி இது போன்ற வலியை ஏற்படுத்தும்.

**மூச்சு விடுதலில் சிரமம்**

சிலருக்கு திடீரென மூச்சுத் திணறல் ஏற்பட்டால் உடனே மருத்துவரை அணுகுவது நல்லது அதிக வேலை செய்யும் போதும், ஓய்வெடுக்கும் போதும் இவ்வாறு மூச்சுத் திணறல் ஏற்பட்டால் அது இதய நோயின் அறிகுறியாகும்.

**நெஞ்சு படபடப்பு**

இதயம் வேகமாக துடிக்க ஆரம்பிக்கும். அப்போது இலேசாக மயக்கம் இருப்பது போல் தோன்றும், மேலும் வியர்வை அதிகமாக இருக்கும். அப்படி இருந்தால் அது இதய நோயின் அறிகுறியாகும். சிலருக்கு அதிர்ச்சியான தகவலைக் கேட்டாலோ அல்லது பயங்கரமான நிகழ்வுகளைப் பார்த்தாலோ இப்படி தோன்றலாம்... எனவே அதன் தன்மையை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**கணுக்கால் வீக்கம்**

இரண்டு கணுக்கால்களிலும் அடிக்கடி வீக்கம் உண்டாகும். சில நாட்களில் அந்த வீக்கம் அப்படியே இருந்துவிடும். மேலும் மார்பு, வயிறு, தொடை, முகங்களில் வீக்கம் உண்டாகும். அந்த இடத்தில் கை வைத்து அழுத்தினால் பள்ளம் ஏற்படும். இப்படி இருந்தால் அது இதயநோயின் அறிகுறியாகும்.

**இடது கைதுடிப்புடன் வலி**

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், நரம்புத் தளர்ச்சிக்கு ஆளானவர்களுக்கும் மார்பு வலியுடன் இடது கை வலித்தால் உடனே மருத்துவரை அணுகுவது நல்லது.

**மயக்கம் ஏற்படுதல்**

இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலில் வியர்வை படபடப்புடன் மயக்கம் ஏற்படும் இதை நன்கு கவனித்து உடனே மருத்துவரை அணுகுவது நல்லது.

**அதிக இரத்த அழுத்தம்**

இரத்த அழுத்தம் ஒரு நோய் அல்ல. ஆனால் அதை அப்படியே குணப்படுத்தாமல் விட்டு விட்டால் அது இதய நோய்க்கு காரணமாக அமைந்து விடும். எனவே இரத்த அழுத்தத்தை சீராக வைத்துக் கொள்ள வேண்டும். சில நேரங்களில் இரத்த அழுத்தமானது சிறுநீரகத்தை செயலிழக்கவும், கண் பார்வை மங்கவும் செய்து விடும்.

இரத்த அழுத்தமானது பெற்றோர்களில் யாராவது ஒருவருக்கு இருந்தால் கூட அது 25% குழந்தைக்கும் வர வாய்ப்புள்ளது.

அதிக இரத்த அழுத்தம் நடுத்தர வயதிற்குப் பின்னரே தலைகாட்டும்.

கோபம், கவலை, இயலாமை, மன அழுத்தம், மன உளைச்சல், தூக்கமின்மை, அதிக வேலைப்பளு இவற்றால் இரத்த அழுத்தம் அதிகரிக்கும்.

**இரத்த பாதிப்புகளிலிருந்து விடுபட**

- உணவில் உப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.
- புகை, மது போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.
- உணவில் உப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.
- உடல் எடை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- மலச்சிக்கல் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- டென்ஷனைக் குறைத்து மன அழுத்தம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்
- தேவையான ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். உடலை அதிகம் வருத்தக் கூடாது. உடற்பயிற்சி அல்லது நடைப் பயிற்சி செய்வது நல்லது.
- இதய நோயிலிருந்து விடுபட உணவு கட்டுப்பாடு மிகவும் அவசியம்.
- சர்க்கரை மற்றும் இனிப்பு வகை உணவுகளை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.
- வாயுவை உண்டாக்கும் கிழங்கு வகைகள், பருப்புகள் சில தானிய வகைகளை தவிர்ப்பது நல்லது.
- குளிரூட்டப்பட்ட பாணங்கள், அதிக வாசனை கலந்த உணவுகள் சாப்பிடக் கூடாது. அது போல் பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் தவிர்ப்பது அவசியம்.
- அதிகம் கொழுப்பு சேர்ந்த பொருட்களைத் தவிர்க்க வேண்டும். எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகளை சாப்பிடுவதும் நல்லதல்ல.
- தேநீர், கோப்பி போன்ற பானங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.
- உணவில் அதிகம் காய்கறிகளையும், பழங்களையும், கீரைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.




# இயற்கையில் கிடைக்கும் விதைகளின் மருத்துவப் பயன்பாடுகள்

**வேப்பவிதை**

வேப்ப விதைகளில் மேல் ஓடுகளை எடுத்து விட்டு பருப்புகளை அரைத்து விஷம் கடித்த இடத்தில் தடவினால் சிறுவிஷம் கொஞ்சம் கொஞ்சமாக இறக்கும்.

இந்த பருப்புகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் வாதநோய்களுக்கு தயாரிக்கப்படும் எண்ணெய்களில் சேர்க்கப்படுகிறது.

விதையின் மேல் ஓட்டை எரித்து அதிலிருந்து வரும் புகையை நுகர்ந்தால் தலையில் உள்ள நீர் இறங்கும். நரம்புத் தளர்ச்சி உள்ளவர்கள் வேப்பெண்ணெயை தடவி வந்தால் நரம்புகள் வலுவடையும்.

இது கர்ப்பத்தடை மருந்தாக பயன்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

**முருங்கை விதை**

பிரம்ம விருட்சம் என அழைக்கப்படும் முருங்கையின் முற்றிய விதையை எடுத்து பொடி செய்து பாலில் கலந்து கொதிக்க வைத்து ஒரு மண்டலம் அருந்தி வந்தால் இழந்த தாதுவை மீண்டும். பெறலாம்.

மேலும் நரம்புத் தளர்வு, உடல் சோர்வு, இரத்த சோகை முதலியவற்றைக் குணப்படுத்தும். முருங்கை விதையை தூளாக்கி தேனில் கலந்து காலை மாலை அருந்தி வந்தால் மேற்கண்ட பாதிப்புகளிலிருந்து விரைவில் மீளலாம்.

**மாங்கொட்டை**

மாம்பழத்தில் உள்ள விதையின் பருப்புகளை எடுத்து நிழலில் உலர்த்தி தூளப்பி வைத்துக்கொண்டு அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் வயிற்றுக் கடுப்பு, வயிற்றுப் புண் நீங்கும். மேலும் மூலச் சூட்டைக் குறைக்கும். உடலுக்கு வலுவூட்டும்.

**புளியங்கொட்டை**

புளிய விதையின் மேல் உள்ள ஓட்டை காயவைத்து பொடி செய்து அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் சிறுநீரக நோய்கள் நீங்கும். பெண்களுக்கு உண்டாகும் வெள்ளை படுதல், அதிக உதிரப்போக்கு மாறும். இதன் பருப்பு தாதுவை விருத்தி செய்யும்.

**முந்திரி பருப்பு**

முந்திரியின் உள் இருக்கும் பருப்பானது பித்தத்தைக் குறைக்கும். உடலுக்கு வலுவூட்டும். தாதுவை விருத்தி செய்யும். உடல் சூட்டைத் தணிக்கும். குழந்தைக்கு உண்டாகும் மந்தத்தைப் போக்கும்.

**புங்க விதை**

புங்க விதையில் உள்ள பருப்பு தோலில் ஏற்படும் புண், கரப்பான், அலர்ஜி இவற்றைப் போக்கும். இதன் எண்ணெய் வெப்பக் கட்டியைத் தடுக்கும். கண் நோய்களைக் குணப்படுத்தும்.

**காட்டுப் புங்க விதை**

இதன் பருப்பானது வயிற்றுக் கடுப்பைக் குணப்படுத்தும். தோலில் ஏற்படும் தேமல், படர்தாமரை போன்றவற்றைப் போக்கும். வாயுத் தொல்லையை குணப்படுத்தும்.

புன்னை விதை வாதக் கோளாறுகளைக் குணப்படுத்தும். கருப்பை நோய்களை போக்கும். உடலில் உள்ள தேவையற்ற நீரைப் போக்கும்.

**வாதுமை பருப்பு**

கண் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களையும் குணப்படுத்தும். உடலுக்கு புத்துணர்வை உண்டாக்கும். எப்போதும் சோம்பலாக இருப்பவர்கள் வாதுமைப் பருப்பை பாலில் போட்டு கொதிக்க வைத்து தினமும் அருந்திவந்தால் தாதுபலப்படும். சோம்பல் நீங்கும்.

**ஆமணக்கு விதை**

ஆமணக்கு விதையின் ஓட்டை நீக்கி, பருப்பை பச்சையாக அரைத்து அல்லது நன்றாக நசுக்கி அனலில் வதக்கி கட்டிகளின் மீது வைத்துக் கட்டினால் கட்டிகள் விரைவில் பழுத்து உடைந்து கட்டிகள் குணமாகும்.

ஆமணக்கு விதையின் பருப்பை தூளாக்கி சட்டியிலிட்டு வதக்கி துணியில் முடிந்து ஒத்தடம் வந்தால் உடலில் உண்டான வீக்கங்கள் குணமாகும்.

இதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் உடல்வலி மற்றும் மலச்சிக்கலைப் போக்கும்.

# அல்சரை குணமாக்கும் 'கரட்'

காய்கறிகளில் முக்கிய இடம் பிடிக்கும் கரட்டை பிடிக்காதவர்கள் யாரும் இருக்க முடியாது. அந்த கரட் நமக்கு அள்ளித் தரும் பயன்களும் ஏராளம், ஏராளம்!

கரட்டில் உள்ள பீட்டா கரோட்டின் புற்று நோய்க்கு எதிராக செயல்பட்டு புற்றுநோய் வராமல் தடுக்கிறது. மேலும், வயிறு தொடர்பான எந்தவித நோய்கள் வராமலும் தடுக்கும் சக்தியும் அதற்கு உண்டு.



**வயிற்றுப் புண்ணால் (அல்சர்)** பாதிக்கப்பட்டவர்கள், உணவில் அதிக காரம் சேர்த்து வயிற்றுவலிலையை இலவசமாக வரவழைத்துக் கொண்டவர்கள் கரட்டை சாறு பிழிந்து, வாரத்திற்கு 3 நாட்கள் வீதம் 2 மாதம் வரை சாப்பிட்டு வந்தால் அந்த பாதிப்பில் இருந்து விடுபடலாம். மேலும், வயிறு சம்பந் தப்பட்ட நோய்கள் வராமலும் தடுக்கலாம்.

சிலருக்கு வாயில் எப்போதும் துர்நாற்றம் இருந்துகொண்டே இருக்கும். அவர்கள் பக் கத்தில் நின்று பேசக்கூட முடியாது. அப்படிப் பட்டவர்கள் 2, 3 முறை பல் துலக்கினாலும் கூட அந்த நாற்றம் மட்டும் அவர்களை விட்டு போகாது. அதற்கு காரணம் வாயோ, பற்களோ அல்லது. வயிற்றுக்குள் இருக்கும் கோளாறுதான்.

வாரம் 5 நாட்கள் மட்டும் கரட் சாற்றை சர்க்கரை மற்றும் உப்பு இல்லாமல் அருந்தி வந்தாலே போதும். துர்நாற்றம் ஓடியேய் போய் விடும்.

கரட்டில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால் நல்ல ஜீரண சக்தியைத் தருகிறது.

பச்சையாக கரட்டை சாப்பிட்டு வந்தால் பற்களில் உள்ள கரைகள் காணாமல் போய் விடும்.

பசியால் தவிப்பவர்கள் ஒரு கரட்டை பச்சையாக சாப்பிட்டாலே போதும், பசி அடங்கி விடும்.

இப்படிப்பட்ட கரட்டை வாரத்தில் 2,3 தடவையாவது சமையலில் சேர்த்துப் பாருங்கள். தேவையில்லாமல் எந்த நோய்களும் உங்களை நெருங்காது.

நெஞ்சில் உரமின்றி நேர்மை திரனின்றி
வஞ்சனை செய்வாரடி – கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி

– பாரதியார்

# தமிழால் செய்த ஆலாவர்ணம் போதும் கலைஞரே செயலில் காட்டும்

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு முதுகில் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது.

முதுகில் ஏற்பட்ட வலி காரணமாக அறுவைச் சிகிச்சை நடந்ததாகவும் அந்த அறுவைச் சிகிச்சை சாதாரணமானதெனவும் அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் கலைஞர் கருணாநிதியோ மிகப் பெரும் ஆபத்தான சத்திரசிகிச்சை அதிலிருந்து உயிர் பிழைத்தது மறு பிறப்பு என்று கூறியுள்ளார்.

பரவாயில்லை. நாஸ்திகக் கொள்கையைக் கொண்ட கலைஞர் இந்து மதம் கூறும் மறு பிறப்புக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளமை பாராட்டுக்குரியது.

அதேநேரம் அறுவைச் சிகிச்சை மூலம் பெறப்பட்ட இந்த உயிர் இனி எப்போதும் உங்களுடையது என்று கலைஞர் கருணாநிதி அழகு தமிழில் – ஆலாவர்ண அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை கலைஞர் கருணாநிதிக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்கு முன்னதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு இதய வால்பு அறுவைச் சிகிச்சை நடந்தது.

மிக ஆபத்தான அந்த அறுவைச் சிகிச்சையில் சுகமடைந்த மன்மோகன் சிங் பௌயமாக வீடு திரும்பினார். அடக்கமாக தனது பணியைத் தொடர்ந்தார்.

ஆனால் கலைஞரோ முதுகுப் புறத்தில் நடந்த சிகிச்சைக்கு கட்டியம் கூறும் ஒப்பனை, அடுத்து வரும் தேர்தலை அடிப்படையாகக் கொண்டது என்பதில் எந்த மறுப்புக்கும் இடமில்லை.

அறுவைச் சிகிச்சையில் சுகமடைந்த கலைஞர் தன் தமிழ் மொழித் திறத்தால் அறிக்கை வெளியிடுவதில் என்ன குறையுண்டு என யாரேனும் கேட்பார்களாயின் அது தவறன்று.

அப்படியாயின் இத்துணை விமர்சனம் எதற்காக என்றால் அங்குதான் நியாயத்துவம் அடங்கியுள்ளது. அதாவது இலங்கையில் தமிழர்கள் தினந்தோறும் பலியாகிக் கொண்டிருக்கின்றனர்.

ஆறு கோடி தமிழர்களின் ஆட்சித் தலைவனாக இருக்கும் கலைஞர் கருணாநிதி என்ன செய்திருக்க வேண்டும். மத்திய அரசை அதட்ட வேண்டாமா? போரை நிறுத்துமாறு இறுதி எச்சரிக்கை செய்ய வேண்டாமா? அது தான் முடியவில்லை என்றால் வை.கோபாலசாமி, பழ.நெடுமாறன், தொல்.திருமாவளவன் போன்றவர்களுடன் இணைந்து ஈழத்தமிழரைக் காப்பாற்ற முனைந்திருக்கலாமல்லவா?

இவை எதனையும் செய்யாமல் தனது ஆட்சி, தனது பதவி, தன் குடும்ப அரசியல் என சுயநலத்துடன் இருந்து கொண்டு என் உயிர் இனி உன் உயிர் என்று கூறுவதெல்லாம் அர்த்தமற்றவை.

தமிழர் அழிந்து கொண்டிருக்கும்போது ஆலாவர்ணத் தமிழ் பேசுவதை விடுத்து, ஆகக் கூடிய காரியத்தைப் பார்க்க வேண்டும். அதுவே தமிழரைக் காக்கும்–காப்பாற்றும்.

# பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் எந்த மன்னிப்பும் கிடையாது

## கனேடிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று வரும் மோதல்களில் நாளாந்தம் அதிக எண்ணிக்கையான மக்கள் கொல்லப் படுகின்றனர். 2 இலட்சத்து 50 ஆயிரம் பொதுமக்கள் போர் நடைபெறும் பகுதிகளில் சிக்கியிருக்கின்றனர். எனவே உடனடியான போர் நிறுத்தம் அங்கு அவசியமானது என கனடாவின் எதிர்கட்சித் தலைவர் மைக்கேல் இக்னாரீஃப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மைக்கேல் இக்னாரீஃப் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனிதாபிமான நெருக்கடிகளை தவிர்ப்பதற்கும் பொது மக்களின் இழப்புக்களை தவிர்ப்பதற்குமான செயற்பாடுகளை இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் நடைபெற்று வரும் மோதல்களில் நாளாந்தம் அதிக எண்ணிக்கையான மக்கள் கொல்லப் படுகின்றனர்.2 இலட்சத்து 50 ஆயிரம் பொதுமக்கள் போர் நடைபெறும் பகுதிகளில் சிக்கியிருக்கின்றனர். எனவே உடனடியான போர் நிறுத்தம் அங்கு அவசியமானது.

இலங்கையில் அரசியல் செயற்பாடுகள் பலப்படவும், மனிதாபிமான பணிகள் முன்னெடுக்கப்படுவதற்குமான பணிகளை அனைத்துலக சமூகம் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என நான் கேட்டுக்கொள்கின்றேன்.

போர் காரணமாக ஆபத்தான சூழ்நிலையில் உள்ள பொதுமக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உணடு.

இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் மேலதிக உயிரிழப்புக்களை தடுப்பதற்கும், அங்கு ஒரு அரசியல் எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் ஒரு சிறப்பு பிரதிநிதியை அங்கு அனுப்ப வேண்டும்.

பொதுமக்களின் மீதான தாக்குதல்களுக்கும், பயங்கரவாதத்திற்கும் எந்த மன்னிப்பும் கிடையாது. பொதுமக்களை பாதுகாப்பதற்கான தமது அக்கறையை உலகம் காண்பிக்க வேண்டும். நாம் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுடனும், கனடாவில் உள்ள இலங்கை மக்களுடனும் எமது உணர்வுகளை பகிர்ந்து கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)


# தவக்கால யாத்திரை

குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கினரால் நடாத்தப்படும் சாட்டி சித்தாத்திரை மாதா ஆலயம் நோக்கிய தவக்கால புனித பாத யாத்திரை 7 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பாத யாத்திரையில் கலந்து கொள்ள விரும்புவோர் தமது பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் போன்ற விபரங்களை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் உடன் பதிவு செய்து கொள்ளுமாறு குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை வணபிதா ஆர். நேசராஜா அடிகளார் கோரியுள்ளார். (ஓ)

# தவக்காலப் பொழிவு

## பொது நன்மையே உன்னை உயர்த்தும்



ஒருவர் நீண்டநேரமாக வேண்டுதல் செய்து கொண்டிருந்தார். இறைவா என்னை ஆசீர்வதியும். என்குடும்பத்தை பாதுகாரும். தொழில் வளத்தை தாரும். பிள்ளைகளுக்கு கல்வி, திருமணத்தை தந்து பிறர் போற்றும்படி என்நிலை உயர அருள் கூரும். பணம் வேண்டும், பொருள் வேண்டும், நீண்ட ஆயுள் வேண்டும், என்று தொடர்ந்து செபித்தான்.

அப்போது ஒருகுரல் மகனே! இந்த ஊரில் நீமட்டும் தானா வசிக்கிறாய். என்றது! ‘இல்லை நிறைய மக்கள் உண்டு’ என்றான் அவன். அவர்கள் நிறைவுடன் வாழ்கிறார்களா என்றது அக்குரல் ‘அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் நிறைவு பெற்றால் போதும்’ என்றான்.

மீண்டும் அக்குரல் உன் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டா? அதை எப்படி சொல்வது. ஒவ்வொருவரும் வெவ்வேறு கோணத்தில் வாழுறம். பாசம், அமைதி, புரிந்துணர்வு மருந்துக்கும் கிடையாது. எப்படி சந்தோசம் வரும் என்றான். இறுதியாக அக்குரல் இவ்வாறு வாழும் நீ கேட்கும் வரங்களால் யாருக்கு என்ன பலன். மகிழ்வை பொருள், பணம், புகழினால் பெறமுடியாது. பிறரன்பு, விட்டுக் கொடுப்பு, மன்னிப்பு, சகிப்புத்தன்மையால் தான் பெற முடியும். சுயநல மன்றாட்டை விடுத்து தூய மனதுடன் பொது நல வேண்டலில் ஈடுபடு. சூழவுள்ளோர் மகிழ்வடைய உன் வீட்டில் இன்பம் அமைதி தானாக உருவாகும் என்றது.

எமக்கு எதுதேவை என்பதை நாம் உருவாகு முன்பே இறைவன் முன்குறித்துள்ளார். எனவே நாம் அவரது திட்டத்தை சித்தத்தை ஏற்று நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக இதுவரை உயிருடன் பாதுகாத்தமைக்காக நன்றி கூறிப்புகழ்வதே சிறப்பான இறை வேண்டலாகும். நமக்காக மட்டு மல்லாது பிறருக்காகவும் அவர்கள் கண்ணீர், கவலைகள், துன்பங்கள் தீரவும் வேண்டுதல் செய்து அனைவரது வாழ்வையும் வழப்படுத்துவோம்.

எஸ்.யேசுதாஸ்

# ஆசிரியர், அதிபர்களின் பிரச்சினைகளுக்கு சில மாதங்களில் தீர்வு காணப்படும்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்களுடன் கலந்தாலோசனை நடத்தியதன் பின்னர் இன்னும் 3,4 மாதங்களில் ஆசிரியர் மற்றும் அதிபர் சேவையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற அதிபர் களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ் விலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திலேதான் அதிகளவிலான நியமனங்கள் அதிபர் மற்றும் ஆசிரியர் சேவையில் வழங்கப்பட்டுள்ளன.

பட்டதாரி ஆசிரியர்தகள் தரம் III ஆசிரியர்கள், ஆசிரிய உதவியாளர்கள், பெருந் தோட்டத்துறை பாடசாலை ஆசிரியர்கள் என இந்த அரசாங்கத்தில் 33 ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன.

ஆசிரியர் மற்றும் அதிபர் சேவையில் கடந்த 11 வருடங் களாக பல முரண்பாடுகள் காணப்படுவது யாவரும் அறிந்த விடயம். இருந்த போதிலும் அவற்றைத் தீர்த்து வைப்பதில் பலசிக்கல்களை கல்வி அமைச்சு எதிர் நோக்குகிறது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை, கல்வியியலாளர் சேவை, அதிபர் சேவை, ஆசிரியர் சேவை போன்ற சேவை சார்ந்த நியமனங் களுக்காக பொதுச்சேவை ஆணைக்குழு, சம்பள ஆணைக்குழு மற்றும் திறைசேரி என்பவற்றின் அனுமதி மற்றும் சிபாரிசுகளுக்காக கல்வி அமைச்சு காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் இந் நியமனங்களை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

இத்தகைய சிக்கல்களை விளங்கிக் கொள் ள்ாத சில ஆசிரிய தொழிற் சங்கங்கள் கல்வி அமைச்சின் மீது குற்றஞ் சாட்டி வருகின்றன.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் சிபாரிசுக்கான காலதாமதத்தினாலேயே நியமனங்களை வழங்குவதில் காலம் கடத்தப்படுகிறது.

கல்வி நிர்வாக சேவையில் நியமனம் வழங்குவதற்காக அரசாங்கம் பொதுச்சேவை ஆணைக்குழுவின் சிபாரிசைக் கோரி 6 மாதங்கள் கடந்தும் அதற்கான அனுமதி இது வரையும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை அமைச்சரவை மட்டத்தில் எடுக்கப்படவுள்ளது. (ஓ-5)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## சுதந்திரனாக இரு



நாம் அனைவரும் ஒன்றே என்பதைத் தெரிந்துகொள். மற்ற அறிவீனங்களை எல்லாம் காற்றில் பறக்கவிடு; நற்செயல், தீயசெயல் ஆகியவற்றைப் புறக்கணி. அவற்றை மீண்டும் ஒரு போதும் நினைக்காதே. நிகழ்ந்தது நிகழ்ந்தது தான். மூடநம்பிக்கையை விடு. மரணமே எதிர்வந்தாலும் பலவீனம் அடையாதே.

நடந்ததை எண்ணி வருந்தாதே. கடந்ததை எண்ணிக் கலங்காதே. நீ செய்த நல்ல செயல்களையும் நினைவில் வைத்துக் கொள்ளாதே. சுதந்திரனாக இரு பலவீனனாக, பயந்தவன்ாக, முட்டாளாக இருப்பவன் ஆன்மாவை அடைய முடியாது. செய்த எதையும் இல்லாமல் ஆக்க முடியாது அதன் பலனை அனுபவித்தேயாக வேண்டும். அதைத் துணிவுடன் எதிர்கொள் அதே செயலை மீண்டும் செய்யாமல் எச்சரிக்கையுடன் இரு. எல்லா செயல்களையும் இறைவனிடம் ஒப்படைத்து விடு நல்லது, தீயது இரண்டையும் சமர்ப்பித்துவிடு. நல்லதை வைத்துக் கொண்டு தீயதை மட்டும் ஒப்படைக்க எண்ணாதே. தனக்குத்தானே உதவி செய்து கொள்ளாதவர்களுக்கே இறைவன் உதவுவார்.

# துணை இராணுவப்படை தலைமையகம் மீதான தாக்குதல் பிரதமரின் தலையீட்டினால் நிறுத்தம்

## பங்களாதேஷ் இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(டாக்கா)

கிளர்ச்சி ஏற்பட்டதை அடுத்து, துணை இராணுவப்படைத் தலைமையகம் மீது அதிரடித் தாக்குதல் நடத்த வேண்டும் என இராணுவம் விரும்பியது. ஆனால், பிரதமர் ஷேக் ஹசீனா அதை நிராகரித்து விட்டார் என பங்களாதேஷ் இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் துணை இராணுவப் படை வீரர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்ட சம்பவம் குறித்து, அந்நாட்டு இராணுவ உளப் பிரிவு இயக்குநர் மகமூத் உசேன் கூறியதாவது,

துணை இராணுவப் படை வீரர்கள் கலவரத்தில் ஈடுபட்ட சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும், அந்த இடத்தை இராணுவம் சுற்றி வளைத்தது. டாங்குகளும் அங்கு நிறுத்தப்பட்டன.

சக அதிகாரிகளை துணை இராணுவ படை வீரர்கள் கொன்று குவிப்பதைத் தடுக்க, தலைமையகம் மீது அதிரடித் தாக்குதல் நடத்த வேண்டும் என இராணுவ அதிகாரிகள் விரும்பினர். இதற்குத் தயார் நிலையில் இராணுவம் இருந்தது. ஆனால் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தத் திட்டத்தை நிராகரித்து விட்டார்.

இராணுவம் தாக்குதல் நடத்தினால், மேலும் உயிர்ச் சேதம் ஏற்படும். அது மிகப் பெரிய பிரச்சினையாக மாறிவிடும். எனவே, அரசியல் ரீதியாக தீர்வு காண்பதே நல்லது எனக் கூறிவிட்டார்.

இதையடுத்தே, தாக்குதல் திட்டம் கைவிடப்பட்டது. இராணுவ வீரர்களுக்கு இடையே இதுபோன்ற மோதல் ஏற்படுவது என்பது வழக்கமானது தான்.

ஆனால், இராணுவ வீரர்கள் உணர்ச்சிகளை அடக்கி, கட்டுக் கோப்புடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும். இவ்வாறு மகமூத் உசேன் கூறியுள்ளார். (ஓ-5)

# இலங்கையில் போர்நிறுத்தத்தை வலியுறுத்தி சிவனடியார்கள் உண்ணாவிரதம்

(கோவை)

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி, கொங்கு நாட்டு ஆதீனங்கள், அருளாளர்கள், சிவனடியார்கள் நேற்று முன்தினம் கோவையில் உண்ணாவிரதம் இருந்தனர். காந்திபுரம் தமிழ் நாடு ஹோட்டல் முன் நடைபெற்ற உண்ணாவிரதத்தை பா.ஜ கவுன்சிலர் கோமதிராஜன் குத்து விளக்கேற்றி தொடக்கி வைத்தார். இதற்குத் தலைமை வகித்த பேரூர் ஆதீனம் மருதாசல அடிகளார் பேசுகையில், இலங்கையில் நடப்பது தமிழர்களுக்கு எதிராக தமிழ் இனத்தை அழிப்பதற்காக நடத்தப்படும் போர். தமிழ் இனத்தை அழிப்பதோடு, புராதன கலைச் சிற்பங்களையும், தமிழ் இலங்கியங்களையும் சிங்களவர்கள் அழித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மிகப் பெரிய நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் எரித்து சாம்பலாக்கப்பட்டன. தமிழர்களைக் காப்பாற்றுவதோடு அங்குள்ள தமிழ் நூல்கள், ஓலைச் சுவடிகள், கலைச் சிற்பங்கள், சமய நூல்களைக் காக்க வேண்டும். பழமையைப் பாதுகாக்க அமைக்கப்பட்டுள்ள யுனெஸ்கோ அமைப்பு, இதில் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்றார். (ஓ-5)

# 28ஆவது முறையாக சிறைவாசம்

## வைகோ தெரிவிப்பு

(திருநெல்வேலி)

இது 28வது முறையாக சிறை செல்கிறேன். 18 ஆண்டுகளுக்கு முன் பாளையங்கோட்டை சிறையில் இருந்தேன். தற்போது மீண்டும் இங்கு வந்திருக்கிறேன் என, வைகோ தெரிவித்தார்.



தூத்துக்குடியில் கடந்த சனிக்கிழமை மத்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் உருவப்படத்தை எரித்ததற்காகவும், சட்டவிரோதமாக கூடிய தற்காகவும் ம.தி.மு.க., பொதுச்செயலர் வைகோ உள்ளிட்ட 195 பேர் கைது செய் யப்பட்டனர்.

சனிக்கிழமை இரவு தூத்துக்குடி நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்திவிட்டு பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு பொலீசார் அழைத்து வந்தனர். வயதானவர்கள், பெண்கள் தவிர வைகோவுடன் கட்சியின் துணைப் பொதுச்செயலர் நாசரேத்துரை, எம்.எல்.ஏ.க்கள் சிவகாசி ஞானதாஸ், விருதுநகர் வரதராஜன், தூத்துக்குடி மாவட்டச் செயலர் ஜோயல், ராஜேந்திரன் உள்ளிட்ட 159 பேரும் நேற்று முன்தினம் காலை 5.10 மணிக்கு சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிறைவாசல் முன் வைகோ நிருபர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கொடுமை தொடர்கிறது. இன அழிப்பு செய்யும் விதமாக தமிழ்த்தாய்மார்களின் கருக்களை அழித்து வீசியுள்ளனர்.

இவ்வாறு வீச ப்பட்ட 90 பெண்களின் சிசுக்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கைப்பற்றியுள்ளது.

இலங்கையில், தமிழர் களுக்கு எதிராகச் செயல்பட்ட பிரணாப் முகர்ஜிக்கு எதிர்ப்பைக் காட்டவே கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

நான் சிறைக்கு வருவது இது 28 ஆவது முறை. கடந்த 1991ஆம் ஆண்டுதி.மு.க., ஆட்சி கலைக்கப்பட்டபோது தென்மாவட்டங்களில் 3 ஆயிரம் பேரை கைது செய்தனர். அப்போது பாளையங்கோட்டை சிறைக்கு வந்தேன். 18 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது வந்துள்ளேன்.

பொலீசாரில் பெரும்பான்மை யோர் தமிழர் என்ற அடிப்படையில் இலங் கையில் நடக்கும் சண்டைக்கு எதிராக உள்ள னர்.

காங்கிரசை திருப்திபடுத்துவதற்காக எங்களைக் கைது செய்துள்ளார் முதலமைச்சர் கரு ணாநிதி. தூத்துக் குடியில் பிரணாப் போர் நிறுத்தம் குறித்து பேசியிருக்கிறார். இது மக்களை ஏமாற்றும் முயற்சி. இவ்வாறு வைகோ கூறினார்.

(ஓ-5)

# சூடான் நாட்டின் உள்நாட்டு கலவரத்தில் 15 பொதுமக்கள் உட்பட 57 பேர் சுட்டுக் கொலை

(கார்தோங்)



ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள சூடான் நாட்டில் அரசுக்கு எதிராக தீவிரவாத அமைப்பு ஒன்று போராடி வருகிறது. இந்தத் தீவிரவாதிகள் மலாக்கல் நகரத்துக்குள் புகுந்து திடீர் தாக்குதல் நடத்தினார்கள். கண்ணில் எதிர்ப்பட்ட அப்பாவி மக்களையும் சுட்டுக் கொன்றனர்.

அந்த இடத்துக்கு அரச படைகள் விரைந்து சென்றன. அவர்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இதில் 57 பேர் கொல்லப்பட்டனர். 100 பேர் காயம் அடைந்தனர். பலியானவர்களில் 15 பேர் பொதுமக்கள், 16 பேர் இராணுவத்தினர் மற்றவர்கள் தீவிரவாதிகள்.

சூடானில் உள்நாட்டு கலவரத்தை அடக்க அங்கு ஏற்கனவே 10 ஐ.நா. சபை அமைதிப் படை உள்ளது. இந்த நிலையில் புதிய மோதல் நடந்துள்ளது. (ஓ-5)

# சிக்கலான முறையில் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் வெற்றிகரமாக பிரிப்பு

## சவூதி அரேபிய மருத்துவர்கள் சாதனை

(சவூதி அரேபியா)



மிகவும் சிக்கலான முறையில் ஒட்டிப் பிறந்த எகிப்திய இரட்டை ஆண் குழந் தைகளை சவூதி அரேபிய மருத்துவர்கள் சனிக்கிழமை வெற்றிகரமாகப் பிரித்துள்ளனர். ஹஸன் மற்றும் மொஹமட் ஆகிய மேற்படி இரு ஆண் குழுந்தைகளும் றியாத் நகரிலுள்ள கிங் அப்துல் அஸீஸ் மருத்துவ நிலையத்தில் இடம் பெற்ற 15 மணி நேர சத்திர சிகிச்சைக்குப் பின் வெற்றிகரமாக பிரிக்கப்பட்டுள்ளதாக சவூதி அரேபிய சுகாதார அமைச்சரும் மருத்துவருமான அப்துல்லா அல்-ரபீக் தெரிவித்தார்.

இக் குழந்தைகளின் சிறு நீரக முறைமையை வேறு பிரிப்பது மருததுவாகளுக்கு பெரும் சவாலாக இருந்ததாக அவர் தெரிவித்தார்.

இம் மருத்துவமனையில் இது வரை54 ஒட்டிப் பிறந்த குழந்தைகள் சத்திர சிகிச்சை மூலம் வெற்றிகரமாகப் பிரித்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

# ஆஸ்காரை விட பெரிய மரியாதை இளையராஜாவுக்கு உண்டு

## திரையிசைக் கலைஞர்களின் பாராட்டு விழாவில் ஏ.ஆர். ரகுமான்

ஸ்லம் டாக் மில்லினர் என்ற ஆங்கில படத்திற்கு இசை அமைத்ததற்காக ஏ.ஆர்.ரகுமானுக்கு 2ஆஸ்கார் விருதுகள் கிடைத்தன. இதையயொட்டி சென்னையில் உள்ள திரை இசைகலைஞர்கள்சங்கம் சார்பில் அவருக்குப் பாராட்டுவிழா நடந்தது.



விழாவில் பாலமுரளி கிருஷ்ணா, எம்.எஸ். விஸ்வநாதன், இளையராஜா, பட அதிபர் ஏவி.எம். சரவணன், டைரக்டர் கே. பால சந்தர், இசையமைப்பாள ர்கள் தேவா, வித்தியாசாகர், ஹாரிஸ் ஜெயராஜ், பரத்வாஜ், தேவிஸ்ரீபிரசாத், சங்கர்கணேஷ், யுவன் சங்கர் ராஜா, பின்னணி பாடகர்கள் டி.எம். சௌந்தரராஜன், மனோ, பாடகிகள் எல்.ஆர்.ஈஸ்வரி, எஸ்.ஜானகி ஆகியோரும் பேசினார்கள்.

நிகழ்ச்சியின் போது இளையராஜா, ஏ.ஆர்.ரகுமானுக்கு தங்கச்சங்கிலி அணிவித்தார். ஹாரிஸ் ஜெயராஜ் மோதிரம் அணிவித்தார். சங்கர்கணேஷ், ஏ.ஆர். ரகுமானை கடைப்பிடித்து அவர் கன்னத்தில் முத்தம் கொடுத்தார்.

விழாக் குழு சார்பில் ஏ.ஆர்.ரகுமானுக்கு ரூ 2 லட்சம் மதிப்புள்ள வெள்ளியால் ஆன உலக உருண்டை நினைவு பரிசாக வழங்கப்பட்டது.

விழாவில் கலந்து கொண்டு ஏ.ஆர். ரகுமான் உரையாற்றும்போது,

"எல்லாப் புகழும் இறைவனுக்கே" எங்கப்பா ஆசியால் தான் எனக்கு ஆஸ்கார் விருது கிடைத்து இருப்பதாக எல்லோரும் சொல் கிறார்கள். அது உண்மைதான். அவர் பட்ட கஷ்டத்திற்கு நான் அறுவடை செய்திருக் கிறேன்.

கடந்த 10 வருடங்களாக ஒவ்வொரு முறை ஆஸ்கார் விருது வழங்கப்படும் போதும் சீனா, ஜப்பான், இத்தாலி ஆகிய நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே விருதுகள் கிடைத்த வந்தது. அந்த விருதை இந்தியா வாங்க முடியாதா என்று பல முறை நினைத்து இருக்கிறேன். இங்கே இளையராஜா, எம்.எஸ். விஸ்வநாதன், கே.வி.மகாதேவன், நௌசாத் போன்ற மேதைகள் எல்லாம் இருக்கிறார்கள். இளையராஜா மீது எவ்வளவு மரியாதை வைத்திருக்கிறீர்கள் என்பதை இங்கு நான் நேரில் பார்த்தேன். இது ஆஸ்காரை விடபெரிய மரியாதை.

எனக்கு, டைம், கிடைக்காத நேரத்தில் தான் ஸ்லாம்டாக் மில்லினர் படத்திற்கு இசையமைத்தேன் அந்தபடத்திற்கு நான் இசையமைக்க எடுத்துக் கொண்ட காலம் 3 வாரங்கள் தான். அந்த இசையை நான் சமர்ப்பித்த போது அமெரிக்கர்கள் எல்லாம் என்னைப் பார்த்து புன்னகைத்தார்கள்.

ரோஜா படத்திற்கு இசையமைத்த போது அதன் பாடல்களை கேட்டு மற்றவர்கள் எல்லாம் எப்படி புன்னகைத்தார்களோ அதை போன்று புன்னகையை அந்த அமெரிக்கர்களின் முகத்தில் பார்த்தேன்.

ஆஸ்கார் விருதுகளை எனக்கு கிடைத்ததாக நான் நினைக்கவில்லை. இங்கிருக்கும் எம்.எஸ். விஸ்வநாதன், இளையராஜா போன்ற மேதைகளுக்கு கிடைத்த விருதாகவே கருதுகிறேன்.

ஒவ்வொரு இசை கலைஞர்களுக்கும் குறிப்பிட்ட ரசிகர்கள் இருக்கிறார்கள் இணையத்தளம் மூலம் என்னை வாழ்த்துவதற்காக இன்னொருவரை தூற்ற வேண்டாம். என் ரசிகர்களை நான் கேட்டுக் கொள்வது எல்லாம்... யாரையும் திட்டாதீர்கள், என்று தெரிவித்தார். (ஓ-5)

# ஐ.சி.சி. டெஸ்ட் மகுடத்திற்கான தொடர்

# வேகப்புயல்கள் அசத்தல்; பழி தீர்த்தது ஆஸி. சொந்த மண்ணில் தென்னாபிரிக்கா தோல்வி



பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட்,5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் ஐ.சி.சி. தரவரிசையில்

சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 466 ஓட்டங்களை எடுத்தது.

கெட்டுக்களையும் மோர்கல் 3 விக்கெட்டுக்களையும் நிற்னி 2 விக்கெட்டுக்களையும் ஹரிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்

பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுக்களை மாத்திம் இழந்து 178 ஓட்டங்

# சந்திரனில் விழுந்து சிதறிய சீன 'சேஞ்ச் 1' விண்கலம்

(பீஜிங்)

சீனாவால் சந்திரனுக்கு அனுப்பப்பட்ட விண்கலமொன்று சந்திரனின் மேற்பரப்பில் விழுந்து சிதறியுள்ளது. 'சேஞ்ச் 1' என்ற மேற்படி விண்கலமானது சந்திரன் வரைபடத்தை உருவாக்கும் தனது 16 மாதகால செயற்பாடுகளின் முடிபில் செயலிழந்து சந்திரனின் மேற்பரப்பில் விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விண்கலமானது 2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏவப்பட்டது. சீனாவானது சந்திரனில் மனிதனை தரையிறக்குவது, விண்வெளி நிலையத்தை ஸ்தாபிப்பது உள்ளடங்கலாக பல்வேறு விண்வெளி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது.

சேஞ்ச் 1 விண்கலமானது கிழக்கு சீனாவிலுள்ள கிங்டா மற்றும் வடமேற்கு சீனாவிலுள்ள கஷ்கார் ஆகிய இடங்களிலுள்ள இரு விண்வெளி நிலையங்களிலிருந்து தூர இயக்கும் முறையின் மூலம் செயற்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சீனா எதிர்வரும் வருடம் அந்நாட்டின் முதலாவது விண்வெளி நிலையத்திற்கான இணைப்பை அனுப்ப திட்டமிட்டுள்ளது.

சுமார் 8.5 தொன் நிறையுடைய தியாங் கொங் 1 என்ற இந்த விண்கல இணைப்பானது சீன விஞ்ஞானிகள் பூச்சிய ஈர்ப்புத் தன்மையில் விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள தளமாக அமையும் என்று கூறப்படுகிறது. (ச-5)

# கிழக்கு அமைச்சர்கள் கலந்துகொண்ட வைபவத்தில் திடீர் வேட்டுச் சத்தம்

மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்று நண்பகல் கிழக்கு மாகாண அமைச்சர்கள் இருவர் கலந்து கொண்ட வைபவமொன்றின் போது திடீரென கேட்ட துப்பாக்கி வேட்டுக்களினால் சில நிமிடங்கள் அங்கு பதற்றமான நிலை காணப்பட்டது.

அமைச்சர் ஒருவரின் மெய்க்காப்பாளருடைய துப்பாக்கி தற்செயலாக வெடித்ததாலேயே இந்த பதற்ற நிலை காணப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாண சுகாதார சேவைகள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் விவசாய அமைச்சர் துரையப்பா நவரட்ணராஜா ஆகியோர் காத்தான்குடி கமநல சேவை நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அமைச்சர் துரையப்பா நவரட்ணராஜாவின் பாதுகாப்பு பொலிஸ் அதிகாரியின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. அவரின் துப்பாக்கியிலிருந்து பாய்ந்த 4 வெற்றுத் தோட்டாக்கள் அந்த பகுதியில் கண்டெடுக்கப்பட்டன.

அவரது துப்பாக்கி உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டதோடு மேலதிக விசாரணைக்கு அவர் உட்படுத்தப்பட்டு வருவதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. துப்பாக்கித் தோட்டாக்கள் மேல் நோக்கிப் பாய்ந்தமையினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## வருடாந்த விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி த.அ.துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (ந)

## முல்லைத்தீவுக் கடலில்...

நேற்று முன்தினம் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரையில் இரு தரப்பிற்கும் கடும் சண்டைகள் நடைபெற்றதாக தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு இந்த மோதல்களின் போது விடுதலைப் புலிகளிற்கு பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை புதுக்குடியிருப்பிற்கு வடக்கே அம்பலவன் பொக்கணைப் பகுதியில் விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்டு வந்த அதிசக்தி வாய்ந்த தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் ஒன்றினை படையினர் கைப்பற்றியிருப்பதாக இராணுவத் தலைமையகம் கூறியிருக்கின்றது.

சக்திவாய்ந்த உபகரணங்கள் மற்றும் பொருட்கள் அடித்து நொருக்கப்பட்ட நிலையில் இந்த நிலையத்தை படையினர் கைப்பற்றியிருந்ததாகவும் இராணுவத் தலைமையகம் கூறியிருக்கிறது.

இதேவேளை புதுமாத்தளன் கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்தொழிலாளர்கள் மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை காலையும் மாலையும் கடற்படையினர் தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாக இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ச-5,14)

## நேற்றும்...

மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதில் 45 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 107 பேர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களினதும் காயமடைந்தவர்களினதும் பெயர் விபரங்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை புதுமாத்தாளன் மருத்துவமனை மீது நேற்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன. மருத்துவமனை வளாகத்தையும் அதனை அண்டிய பகுதிகள் மீதும் நேற்று மாலை 5.00 மணியளவில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஏற்கனவே எறிகணைத் தாக்குதல்களினால் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்களும் சிகிச்சை பெற வந்த நோயாளர்களும் பெரும் அவலப்பட்டுசிதறியோடினர் என கூறப்படுகிறது. (ச-5)

## யுத்த நிறுத்தம் செய்வதால்...

போராளிகள் அல்லது விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக தம்மைப் பலப்படுத்தியே வந்துள்ளனர்.

போர் நிறுத்தத்தால் எந்தவித பயனும் ஏற்பட்டு விடப்போவதில்லை. எனவே மனிதாபிமான நலன்களை மனதில் வைத்து எமது போர் நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்தும் நடத்துவோம். இந்தியா அக்கறை எழுப்பியுள்ள விடயங் களில் திருப்தி ஏற்படுமிடத்தில் பல்வேறு மாற்று நடவடிக்கைகளை நாங்கள் செய்ய இருக்கிறோம்.

அரசால் அமைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்களிற்கான நலன்புரி முகாம்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகள் பற்றி ஐ.நாவின் மனிதாபிமானத்துறை தலைவர் ஜோன் ஹோம்ஸ் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அறிக்கை சமர்ப்பித்தபோது முகாம்களிலுள்ள பொதுமக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் மிகக் கடுமையானவை என கூறியிருந்தார். இது தொடர்பாக கூறிய றோகித போகொல்லாகம,

இந்த தடைகள் அந்த மக்களின் பாதுகாப்பிற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மக்கள் அனைவரும் உரிய காலத்தில் அவர்களது வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். யாராவது ஒரு விடுதலைப் புலி உறுப்பினர் முகாமுக்குள் நுழைந்து இந்த முகாமின் பாதுகாப்பை சீர்குலைக்கவில்லை என்பதை நாங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள விரும்புகின்றோம்.

முகாமிலுள்ள மக்களிற்கு எந்த ஒரு ஆபத்து வருவதையும் நாங்கள் தவிர்த்துக் கொள்ள விரும்புகின்றோம்.

இதனால் தான் முகாமிற்குள் வருவோர், செல்வோர் மீது நாங்கள் உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

ஒரு சிறிய இடத்துள் இரண்டாயிரம் பேர் வாழும்போது ஏதாவது அனர்த்தம் நடந்தால் அது விபரீதமாகிவிடலாம். அதனால்தான் நாங்கள் அந்த முகாம்களில் கட்டுப்பாடுகளை விதித்துள்ளோம் என்று அவர் கூறினார். (ச-14)

## விடுதலைப்...

அளித்துள்ளனர்.

அவர்கள் வழங்கிய தகவலின் பிரகாரம் யாழ்ப்பாணம் அச்சுவேலி இடைக்காடு பகுதியை சேர்ந்த முருகுப்பிள்ளை சிவரூபன் (வயது 30) எனபவரே விடுதலைப்புலிகளின் விமானத்தை செலுத்தி வந்தவரென இனம் காணப்பட்டுள்ளது.

இவர் விடுதலைப்புலி இயக்கத்தின் இம்ரான் பாண்டியன் படையணி உறுப்பினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## இராணுவப் போக்குவரத்...

இராணுவத்தினரை அழைத்துச் செல்வது, இராணுவ தளபாடங்களை கொண்டு செல்வது போன்ற இராணுவத்தினரின் தேவைக்கான ஏ-9 வீதி நேற்று திறந்துவிடப்பட்டுள்ளது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார கூறினார்.

கடந்த 24ஆம் திகதி குடா நாட்டுக்கான முதல் தொகுதி உணவுப் பொருட்கள் ஏ-9 வீதியூடாக எடுத்துச் செல்லப்பட்டதாகவும் ஓமந்தைக்கும் முகமாலைக்கும் இடையிலான பகுதி முழுவதும் இராணுவத்தினர் வழித்துணை வழங்கி சென்றுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

தற்போது முன்னெடுக்கப்படும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் பூர்த்தி அடைந்ததும் ஏ-9 வீதி மிக விரைவில் பொதுமக்களின் பாவனைக்கு திறந்துவிடப்படும் என பிரிகேடியர் உதயநாணயக்கார தெரி வித்தார்.

மோதல்களால் ஏ-9 வீதியில் சில பகுதிகள் மோசமாக பாதிக்கப்பட் டிருப்பதாகவும் அவற்றைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை சரித்திர முக்கியத்துவம் மிக்க வைபவம் என இதனை வர்ணித்துள்ள இராணுவ தலைமையகம் அதனை ஒட்டி அநுராதபுரம், ஓமந்தை, பலாலி, ஆனையிறவு ஆகிய கேந்திர முக்கியத்துவம் மிக்க இடங்களில் விசேட வைபவங்கள் இடம்பெற்றதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை எதிர்வரும் 9ஆம் திகதி முதல் ஏ-9 வீதியூடாக பொதுமக்களுக்கான பொருள்களை கொண்டு செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையிலே ஜனாதிபதியின் சகோதரரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷவினுடைய தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், அமைச்சர் றிசாட் பதியுதீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.


அங்கு எடுக்கப்பட்ட முடிபின்படி எதிர்வரும் 9ஆம் திகதியிலிருந்து ஏ-9 பாதை யூடாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பொருள்களை அனுப்புவதற்கான முடிபு எடுக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்புத் தரப்பினுடைய உதவியோடு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இந்தப் பொருட்களை கொண்டு செல்வதன் மூலம் இதை இலகுபடுத்துவதற்காகதிட்டமிடப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக பொருள்களினுடைய விலைகளிலே பாரிய மாற்றங்கள் ஏற்படும். ஜனாதிபதியும் இந்தப்பணியை எதிர்வரும் 9ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துமாறு பணித்திருக்கிறார் என பதியுதீன் தெரிவித்தார். (ச-3,14)

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் செல்லையா

(முன்னாள் விவசாய சம்மேளனத் தலைவர்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் செல்லையா அவர்கள் 02.03.2009 நேற்று திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலாவதியின் அன்புக் கணவரும் ஞானசேகரம் (ஆசிரியர், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்), சந்திரசேகரம் (கனடா), பரராஜசேகரம் (ஆசிரியர், புங்குடுதீவு ஸ்ரீ சித்தி மகா வித்தியாலயம்), பத்மராணி-கலாசார உத்தியோகத்தர் கல்வியமைச்சு, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் (பிரதேச செயலகம், சாவகச்சேரி), பஞ்சநாதன் (ஜேர்மன்), சுந்தரவதனி (ஜேர்மன்-முன்னாள் உத்தியோகத்தர்- நல்லூர் பிரதேச செயலகம்), புஸ்பகாந்தி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பத்மரஞ்சனி, பத்மரஞ்சன் (பிரான்ஸ்), குகாஜினி (அபிவிருத்தி உதவியாளர், யாழ்.செயலகம், புனர்வாழ்வுக் கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும்.

சிவஜெயந்தி (யாழ்.செயலகம், கணக்குக் கிளை), சாந்தாதேவி, சிவஞானராசா (ஹோட்டல் ஒசானிக், திருகோணமலை), ஜனனி (ஜேர்மன்), சுரேந்திரராஜன் (ஜேர்மன்), தயானந்தராஜன் (உரிமையாளர் -ராஜன் புத்தக நிலையம்), விஜயலட்சுமி, தினேஸ்குமார் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

கஜானி, கஜகர்ணி, அரவிந், ஆரணி, அர்ச்சனா, அபிஷன், அபிரான், மெலானி, ஹரி, ஹரன், பவித்திரா, வித்தகி, குருபரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கனகம்மா, துரையம்மா, ரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 03.03.2009 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 15, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(2367)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses... ## பதிவு செய்வோருக்கு கற்கை கட்டண சலுகை
## MS Office ## DTP
* Accounting * English * VB.net
## Hardware * Web Developing
* Video Editing *AutoCAD
International Courses...
## MCP ## MCSE ## MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5




மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com


## கண்ணீர் அஞ்சலி



எமது வலம்புரிக் குடும்பத்தில் பணியாற்றிய திரு.பத்மரஞ்சன் அவர்களின் அன்புத் தந்தையார்

### சிற்றம்பலம் செல்லையா

அவர்களின் மறைவுக்கு கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

\- வலம்புரிக் குடும்பம்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.